Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகின் எப்பாகத்திலிருந்தும்
WESTERN UNION பணப் பரிமாற்றம்
மூலம்
தங்களுக்கு கிடைத்த இலக்கங்கள் 10உடன் எம்மை நாடுங்கள்
ஸ்ரீமுருகன் தொலைத்தொடர்பகம்
வங்கிக்கணக்கு அவசியமில்லை
கமிஷன் ஏதுமில்லை
365 நாட்களிலும் எந்நேரத்திலும்
303, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 222 5392
Fax:222 3214
E-mail: del-smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி,
காரைநகர்.
T.P: 0602212472

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.ஆசிர் 15 (04.06.2004) வெள்ளிக்கிழமை இதழ்:246

## இந்தியாவின் உதவியுடன்

# அரசியல் பலம்பெற்ற பின்னரே புலிகளுடன் அரசு பேசவேண்டும்!

### இந்திய பாதுகாப்பு ஆலோசகர் டிக்ஸிற் ஆலோசனை



(புதுடெல்கி)

இந்தியாவின் உதவிகளைப் பெற்று - அரசியல் ரீதியாகப் பலம் வாய்ந்த சக்தியாக உருவெடுத்த பின்னரே- இலங்கை அரசாங்கம், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்த வேண்டுமென,

இலங்கைக்கான முன்னாள் இந்தியத் தூதுவரும்- தற்போதைய இந்தியத் தேசியப் பாதுகாப்பு ஆலோசகருமான ஜே.என்.டிக்ஸிற் தெரிவித்துள்ளார்.

கடந்தவாரம் இந்தியாவில் புதிய தேசியப் பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்ற ஜே.என்.டிக்ஸிற் 'இந்துஸ்தான் ரைம்ஸ' பத்திரிகைக்கு அளித்த விசேட பேட்டியிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியா இலங்கைக்கு பல்வேறு வகையிலும் உதவிகளை வழங்கியுள்ளது. விடுதலைப் புலிகள் இந்திய அரசை பாதிக்கின்ற வகையில் தமது செயற்பாடுகளை மேற்கொண்டு வந்தால்- அதனைக் கட்டுப்படுத்த இந்தியா இராணுவ ரீதியாகத் தலையிட வேண்டிவரும்.

விடுதலைப் புலிகள் கோருவது போன்று தனிநாட்டுக் கோரிக்கையை சர்வதேச சமூகம் எதிர்த்து வருவ

(12ஆம் பக்கம் பார்க்க)

### இந்திய விஜயம் குறித்து

## ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கதிர்காமர் விளக்கினார்!

(கொழும்பு)

இந்தியாவிலிருந்து திரும்பிய வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தினார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச்சந்திப்பு - கதிர்காமரின் இந்திய விஜயம் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்குவதற்காக இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

நான்குநாள் விஜயத்தை மேற்கொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங், இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங், பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி, காங்கிரஸ் கட்சித்தலைவி சோனியா காந்தி ஆகியோரைச் சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இலங்கையில் முன்னெடுக்கப்படும் சமாதான முயற்சிகள், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்பட உத்தேசிக்கப்பட்டிருக்கும் பாதுகாப்பு ஒப்பந்தம் ஆகியன (12ஆம் பக்கம் பார்க்க)

### கூட்டமைப்பு எம்.பிக்கள்

## தமிழ்ச்செல்வனை நாளை சந்தித்துப் பேசவுள்ளனர்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

நாளை காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதில் தற்போதைய அரசியல் நிலை மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக தெரியவருகின்றது. தமிழ்த் தேசியக்

## பாரிய நிதி நெருக்கடிக்குள் அரசு; மக்களிடம் கடன் திரட்ட ஏற்பாடு!

### பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் பாரிய நிதி நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதாகவும், இதனால் 2500 கோடி ரூபாவை பண முறிகள் மூலம் மக்களிடம் திரட்டித் தருமாறு மத்திய வங்கியிடம் கேட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான

செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கும்போது ஜனாதிபதியும், ரில்வின் சில்வாவும் தமக்குள் இருக்

மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றப் போவதாகக் கூறிய விடயங்கள் எவற்றையுமே அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

அரசாங்கத்திற்கு தற்போதைய நிலையில் 48 பில்லியன்

கிளிநொச்சிக்கு சென்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

நாளை காலை 10.30 மணிக்கு கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறவுள்ளது.

இதில் தற்போதைய அரசியல் நிலை மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடவுள்ளதாக தெரியவருகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் இந்தச் சந்திப்பில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளதாக தெரியவருகின்றது.

கடிக்குள் சிக்கியிருப்பதாகவும், இதனால் 2500 கோடி ரூபாவை பண முறிகள் மூலம் மக்களிடம் திரட்டித் தருமாறு மத்திய வங்கியிடம் கேட்டிருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கும்போது ஜனாதிபதியும், ரில்வின் சில்வாவும் தமக்குள் இருக்கும் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்காக கடிதப் பரிமாற்றங்கள் செய்துகொண்டிருக்கின்றனர்.

மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றப் போவதாகக் கூறிய விடயங்கள் எவற்றையுமே அரசாங்கம் நிறைவேற்றவில்லை.

அரசாங்கத்திற்கு தற்போதைய நிலையில் 48 பில்லியன் ரூபா தேவை. பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்களை வழங்கினால் அதற்கு

(12ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்த நடேசனின் பூதவுடல் தீயுடன் சங்கமமானது



இறுதி அஞ்சலி செலுத்தும் குடும்பத்தினர்

(யாழ்ப்பாணம்)

சிரேஷ்ட பத்திரிகையாளரும் நாட்டுப் பற்றாளருமான நடேசனின் இறுதிக் கிரியைகள் நேற்று நெல்லியடியில் அவரது இல்லத்தில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தையடுத்து அவரது பூதவுடல் வதிரி ஆலங்கட்டை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

நெல்லியடியில் அமைந்துள்ள நடேசனின் இல்லத்தில் இருந்து நேற்றுக்காலை 10.00 மணியளவில் அவரது புகழுடல் மாணவ, மாணவிகளின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்பும், பத்திரிகையாளர்கள், போராளிகள், உறவினர்கள், பொதுமக்கள் புடைசூழ நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு அஞ்சலிக்கூட்டம் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இரா.துரைரட்ணம் தலைமையில் இடம்பெற்றது.

(12ஆம் பக்கம் பார்க்க)



இறுதி யாத்திரையில் நடேசன்





இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

(சி/2489)

EXPOAIR

Your friend in the skies...

தலைசிறந்த வங்கி • 2004



குளோபல் ஃபினான்ஸ்

6 ஆவது தொடர்ச்சியான வருடமாக

# எமது வெற்றி தொடர்கிறது...

## தொடர்ந்து ஆறு வருடம்!

கொமர்ஷல் வங்கி தொடர்ந்து ஆறுவருடங்களாக குளோபல் ஃபினான்ஸின் "தலைசிறந்த வங்கி" என்ற விருதினை வென்று சாதனை நிலைநாட்டியுள்ளது. நாம் இந்த வெற்றிப் பெருமிதத்தை எங்கள் அபிமான வாடிக்கையாளர்களான உங்களுடன் மனப்பூர்வமாகப் பகிர்ந்துகொள்கிறோம். ஆண்டாண்டு காலமாக நீங்கள் காட்டிவரும் ஆதரவே எங்கள் வெற்றிக்கு உறுதுணையாக இருக்கின்றது. நீங்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கை எதிர்காலத்திலும் எங்களுக்கு உந்துசக்தியாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இலங்கையின் தலைசிறந்த வங்கியாக முன்னணி வகிக்கும் நாம், உங்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வ நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

Q&E Advertising

(சி/2605)





Rated by GLOBAL FINANCE

கொமர்ஷல் வங்கி

உங்கள் நலமே எங்கள் நோக்கம்

# போர் இன்னும் ஓயவில்லை என்பதையே நடேசனின் படுகொலை வெளிப்படுத்துகிறது

## புலிகளின் முக்கிய பிரமுகர் பாலகுமாரன்



ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசனின் கொலை, தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்டுள்ள பாரிய அநீதி. இவரது கொலைக்குப் பின்னால் பெரியதொரு வரலாறு உருவாகப்போகிறது என, தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

ஊடகவியலாளர் ஜி.நடேசனின் இறுதி நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் கிளிநொச்சி பண்பாட்டு மையத்தில் நடைபெற்றவேளை - அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

நீண்டகால யுத்தத்தினால் அடைந்த இழப்புக்களையும், பாதிப்புக்களையும் கண்டு சிங்கள சமூகம் திருந்தியுள்ளது, தமிழரின் உணர்வுகளைப் புரிந்துகொண்டுள்ளது. அதற்கமைவாகச் செயற்பட்டு, நமது பிரச்சினைகளை தீர்த்து வைக்கும் என நினைத்திருந்தோம். அவை பாரிய தவறான எண்ணம் என்பதையும், சிங்களதேசம் இன்னும் திருந்தவில்லை என்பதையும் எடுத்துக்காட்டும் வகையில் ஜி.நடேசனின் கொலை அமைந்துள்ளது.

போர் இன்னமும் ஓயவில்லை என்பதையே நடேசனின் கொலை வெளிப்படுத்துகின்றது.

பேரினவாத அடக்குமுறைகள் தொடரும். தமிழ்த் தேசியம் பற்றியும், தமிழரின் உரிமையைப் பற்றிப் பேசுவோர் அழிக்கப்படுவர் என்பதையே இந்தப் பாதகச் செயல மூலம் பேரினவாத சக்திகளும், அவர்களது கூலிகளும் வெளிப்படுத்தி நிற்கின்றனர்.

தமிழர்கள் புதிய வாழ்வைப் பற்றி எண்ணிக்கொண்டிருக்கையில் போராட்டம் முடியவில்லை, பேரினவாத அடக்குமுறைகள் தொடர்கின்றன என்பதை வலுப்படுத்தி காட்டுவதைப்போல் இந்தப் படுகொலைகள் அமைந்துள்ளது. தமிழ சமூகத்தின் சிறந்த ஊடகவியலாளரான நடேசன், எமது தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் வழிகாட்டியாக விளங்கியவர்.

அவரின் கொலை மூலம் எமது எதிரி எமக்கு எதைக் காட்ட விளைகின்றான். யுத்தத்தைத் தொடர வேண்டும் என்றா? அல்லது பேச்சை இப்படியே இழுத்துச் சென்று அதனூடாகத் தம்மைப் பலப்படுத்தி தமிழீழ விடுதலைப்புலிகளை நசுக்கிவிட முடியும் என்றா எண்ணுகின்றார்கள்? எதிரியின் உண்மையான விருப்பம் எது என்பது தமிழீழத் தேசியத் தலைவருக்கு நன்கு தெரியும். அவருடைய பார்வையிலிருந்து உண்மையான குற்றவாளிகள் தப்பிச சென்றுவிடமுடியாது.

பலகாலமாகவே வெளிநாட்டு இராஜதந்திரிகள் எனப்பலரும் வருகைதந்து இலங்கைபற்றி அறிந்திருக்கின்றனர். எனினும், அதற்கு நல்லபதிலோ, சரியான தீர்வோ இதுவரையில் எவராலும் முன்வைக்கப்படவில்லை. இது வெளிநாட்டவரின் வருகையை ஐயப்படச் செய்கின்றது. ஆட்சிமாறும் காலத்தில் ஆட்சியாளர்கள் கொடுக்கும் வாக்குறுதிகளை காலம்செல்கையில் மறந்துபோகின்றனர். இந்தநிலை மாற வேண்டும்.

ஊடகவியலாளரின் சுதந்திரம் மறுக்கப்படுவது இங்குள்ள புத்திசாலிகள், கல்விமான்கள் மத்தியில் பெரும் விசனத்தினை ஏற்படுத்தியிருக்கின்றது என, அங்கு அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்களை அனுமதிப்பதற்கான ஏற்பாடுகள் ஜனவரி 15 இற்குள் பூர்த்தியாகவேண்டும்!

அடுத்த ஆண்டில் பாடசாலைகளில் புதிய மாணவர்களை அனுமதிப்பது குறித்த அனைத்து ஏற்பாடுகளையும் ஜனவரி 15 ஆம் திகதிக்கு முன்னதாக பூர்த்திசெய்யவேண்டும் என, கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த ஆண்டு பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்த்துக்கொள்வது தொடர்பான அறிவித்தல் இந்தவார இறுதிக்குள் முடிவடைந்துவிடும் என, கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேபோன்று முதலாவது தரத்திற்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை இந்தவருட இறுதிக்குள் முடித்துவிட வேண்டும் என்று, கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

# ராஜீவ் கொலைவழக்கில் உதவ ஐரோப்பா நிபந்தனை விதிப்பு!

முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலைவழக்குத் தொடர்பான சாட்சியங்கள் கிடைத்தால் அவற்றை ஒப்படைக்க சில ஐரோப்பிய நாடுகள் நிபந்தனை விதித்துள்ளன.

ராஜீவ் கொலைக்கு முன்பும் அதன் பின்பும் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு பணம்சென்ற வழிமுறைகள் குறித்து, பல்நோக்கு கண்காணிப்பு ஏஜென்சி தீவிரமாக ஆராய்ந்துவருகிறது.

குறிப்பாக சந்திராசாமி மற்றும் புலிகளுக்கு நிதியைத் திரட்டிக்கொடுக்கும் பத்மநாபன் ஆகியோர் மூலம் 50 வங்கிகள் வழியாக விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுக்கல்வாங்கல் நடந்திருப்பதாக சிபிஐ கண்டறிந்துள்ளது.

இது தொடர்பான விவரத்தை அறிந்துகொள்ள உதவுமாறு 23 நாடுகளுக்கு ஏஜென்சி கடிதம் எழுதியது. ஆனால், தங்களுக்குக் கிடைக்கும் தகவல்களை அனுப்பத் தயாராக இருக்கும் இங்கிலாந்து உள்ளிட்ட சில நாடுகள் ஒரு நிபந்தனையை விதித்துள்ளன.

தாங்கள் தரும் ஆதாரங்கள் மூலமாக கைது செய்யப்படும் குற்றவாளிகள் யாருக்கும் மரணதண்டனை அளிக்கக்கூடாது என்ற நிபந்தனை அது. இது குறித்து மத்திய அரசுடன் விரைவில் விவாதிக்க உள்ளதாக பல்நோக்கு கண்காணிப்பு ஏஜென்சி கூறியுள்ளது.

# அபிவிருத்தியும் சமாதானமும் சமகாலத்தில் ஏற்படவேண்டும்

## திருமலை அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன்

தமிழர் விடுதலைப் போராட்டத்தை இன்று சர்வதேச சமூகங்கள் புரிந்துகொண்டு அதை ஏற்றுக் கொண்டுள்ளது. இலங்கையில் பிரச்சினை தீர்வுக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதன்போதே உதவி வழங்கப்படும் என்ற தீர்மானத்தை உதவி வழங்கும் நாடுகள் எடுத்துள்ளன. இது எமது போராட்டத்தை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொண்டதற்கு அடையாளமாகிறது. இவ்வாறு விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

திருகோணமலை அண்ணா மீனவர் முன்னேற்றக் கழகத்தின் மண்டபத் திறப்பு விழா நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு எழிலன் உரையாற்றினார்.

எமது சமுதாயம் ஆரோக்கியமான சமுதாயமாக மாறவேண்டும். மண்ணை மீட்பது மட்டும் விடுதலைப் போராட்டம் இல்லை, இது தலைவரின் சிந்தனை. இதற்கு ஏற்ப செயற்பாடுகள் நடைபெற வேண்டும். கிராம அமைப்புக்கள் இதற்காகப் பாடுபடவேண்டும்.

வடக்கு - கிழக்கு கடல் வளம் பெருத்த வருமானத்தைத் தரும் ஒன்றாக இருக்கின்றது. பெரும்பாலான மீனவர்கள் வறுமையில் வாடுகின்றனர். வளங்களைக் கொண்டு அபிவிருத்தியைத் தேடவேண்டும். தொழில்நுட்ப ரீதியாக வளர்ச்சியடையவும், எம்மைத் தயார்படுத்திக் கொள்ளவேண்டும்.

அபிவிருத்தியும், சமாதானமும் சம காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்காக இடைக்காலத் தீர்வுத் திட்ட அலகினை நாம் முன்வைத்துள்ளோம் எனத் தெரிவித்தார்.

*அரச ஊழியர்களின்*

# சம்பளத்திட்டங்கள் தொடர்பாக தேசிய கொள்கை வகுக்கப்படும்!

## அமரசிறி தொடங்கொட தெரிவிப்பு

அரச ஊழியர்களின் சம்பளத் திட்டங்கள் தொடர்பாக தேசிய கொள்கையொன்றை வகுப்பதற்கான திட்டத்தை தயாரிப்பதற்காக விசேட குழுவொன்றை நியமிக்கவுள்ளதாக - பொது நிர்வாகசேவை அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலமாக அரச ஊழியர்களின் சம்பளமுறைகளில் நிலவும் முரண்பாடுகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கமுடியும். அரச ஊழியர்களின் சம்பளமுறைமைகளில் அடிக்கடி முரண்பாடுகளும், சிக்கல்களும் தோன்றுகினறன.

எனவே இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்கு சம்பள முறைமை தொடர்பான தேசிய கொள்கையொன்றும் வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும் என்றும் தெரிவித்தார்.

அரசதுறை தொழிற்சங்கங்கள் பல, அண்மையில் அமைச்சர் அமரசிறி தொடங்கொடவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார். இந்தத் தொழிற்சங்கங்களின் வேண்டுகோளுக்கு அமையவே சம்பள முறைமை தொடர்பான தேசிய கொள்கையைத் தயாரிக்க அமைச்சர் இணங்கியுள்ளார்.

# மதமாற்றம் உட்பட மூன்று சட்டங்கள் நாடாளுமன்றில் கொண்டுவரப்படவுள்ளது

நியாயபூர்வமற்ற மதமாற்றத்தைத் தடைசெய்யும் சட்டம் உட்பட பௌத்த பிக்குகளுக்குச் சாதகமாக மூன்று சட்டங்களை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக பௌத்த சாசன அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். மதமாற்றத் தடைச்சட்டம், சங்கடிகாரணய எனப்படும் பௌத்த பிக்குகளுக்கான நீதி பரிபாலன முறையை அறிமுகப்படுத்தும் சட்டம் மற்றும் பௌத்த மரபு தொடர்பான ஒரு சட்டம் ஆகியவற்றையே நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

மதமாற்றத் தடைச்சட்டம் விரைவில் கொண்டு வரப்படவேண்டும் என நாடாளுமன்றத்தில் ஒன்பது ஆசனங்களைக் கொண்ட ஜாதிக ஹெல உறுமய நீண்டநாட்களாக வலியுறுத்தி வரும் நிலையில், அரசியல் ரீதியாக அரசாங்கத்தைப் பலப்படுத்தும் நோக்குடன் நாடாளுமன்றத்தில் குறைவான ஆசனங்களைக் கொண்டுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் இப்போது இந்தச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, மதமாற்றத்தை தடைசெய்வது தொடர்பான சட்டநகலொன்றை தனிநபர் பிரேரணையாக ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருந்தமையும், இச்சட்டத்தின்படி மதமாற்றச் செயற்பாடுகளுக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதப் பணமும், சிறைத் தண்டனையும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# விமானப்படை அனுமதி தேவையில்லையாம்!

வவுனியா ரம்பைக்குளம் சேமக்காலையில் நேற்றுமுதல் விமானப் படையின் அனுமதியின்றி சடலங்களை அடக்கம் செய்யவும், தகனம் செய்யவும் முடியுமென வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

நேற்றுக்காலை வன்னி விமானப்படைத்தள அதிகாரி குறூப் கப்டன் குருசிங் கவுடன் இடம்பெற்ற சந்திப்பில் இதற்கு இணக்கம் காணப்பட்டது.

கடந்த பல ஆண்டுகளாக இந்த சேமக்காலையில் சடலங்களை அடக்கம் செய்வதாயின் மரண அத்தாட்சிப்பத்திரம், கிராமசேவையாளரின் அத்தாட்சிப் பத்திரம் விமானப் படையின் கடிதம் ஆகியன பெற்றிருக்கவேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டிருந்தது.

எனினும், நேற்றுமுதல் பாதுகாப்புக் காரணம் கருதி மரண அத்தாட்சிப்பத்திரத்துடன் மட்டும் சடலங்களை அடக்கம் செய்யவும் தகனம் செய்து சாம்பல் எடுக்கவும் முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

## இலங்கை - இந்திய கடற்பிராந்தியத்தில்

# மூன்றாவது பலம்பொருந்திய சக்தியாக கடற்புலிகளே விளங்குகின்றனர்

## இந்திய ஆய்வாளர் தெரிவிப்பு

இலங்கை - இந்திய கடற்பிராந்தியத்தில், மூன்றாவது பலம்பொருந்திய சக்தியாக விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் விளங்குவதாகச் சென்னை பல்கலைக்கழக தெற்காசியக் கற்கைநெறிகளுக்கான முன்னாள் பணிப்பாளர் வீ.சூரியநாராயணன் தெரிவித்தார்.

அந்த வகையில் - இலங்கை இந்திய நாடுகளுக்குப் பெரும் சவாலாகவும், ஆபத்தாகவும் விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் விளங்குவார்கள் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

இலங்கை - இந்தியக் கொள்கை உருவாக்கத்திலுள்ள வேறுபாடுகளை நிவர்த்திசெய்து இருதரப்பினரும் இணைந்து கடற்புலிகளின் செயற்பாட்டை நிறுத்துவதுதொடர்பான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அவசியமானது, இதற்கு சிறப்பானதொரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்கவேண்டியிருக்கும்.

இதேவேளை - விடுதலைப் புலிகள் கடல்சார் நிபந்தனைகளை விதித்திருப்பதை ஏற்கனவே அறிந்திருப்பதாகத் தெரிவித்த அவர், நேர்வே தரப்பினரே மறைமுகமான ஆதரவை இதற்கு வழங்குவதாகவும் சுட்டிக் காட்டினார்.

அத்துடன், விடுதலைப் புலிகளால் கோரப்பட்டுள்ள இடைக்கால தன்னாட்சி அதிகாரக் கட்டமைப்பில் அவர்கள் கடல்சார் கட்டுப்பாட்டையும், கடல்வளங்களின் கட்டுப்பாட்டைக் கோரியுள்ளதனையும் சுட்டிக்காட்டிய சூரியநாராயணன் - இது பிராந்தியத்தில் மிகவும் ஒரு ஆபத்தான நிலையை ஏற்படுத்தும் எனவும் எச்சரித்துள்ளார்.


கடல்களின் உயிர்ப்பை காப்போம்!

மாசடைந்த கடல் உணவுகளை உட்கொள்வதால் உண்டாகும் ஈரலழற்சி நோயின் வருடாந்த பொருளாதார தாக்கம் மட்டும் 7.2 பில்லியன் டொலர்கள் ஆகும்

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

## பாரம்பரிய கலை நிகழ்வுகளைக் கொண்ட
# மாபெரும் ஊர்வலத்திற்கான நிகழ்ச்சி கோரல்

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி எதிர்வரும் யூலை 16,17,18 ஆம் திகதிகளில் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் மூன்று நாட்கள் கலைவிழாவுடன், நிறைவு நாளில் (18ம் திகதி) தமிழர்களின் கலை விழுமியங்களை வெளிப்படுத்தும் பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளைக் கொண்ட எழுச்சி ஊர்வலம் ஒன்றையும் நடாத்த முடிவு செய்துள்ளோம். எனவே இவ் ஊர்வலத்தில் பின்வரும் நிகழ்வுகள் இடம்பெறுவதை நாம் விரும்புகின்றோம்.

### 1. புராதன கிராமிய ஆட்டம்/நடனம்

* சுளகு கிராமிய நடனம்
* செம்பு கிராமிய நடனம்
* கொத்து கிராமிய நடனம்
* கூடை கிராமிய நடனம்
* அரிவாள் கிராமிய நடனம்
* கத்தி கிராமிய நடனம்
* வாள் கிராமிய நடனம்
* பெட்டி/கடகம் கிராமிய நடனம்
* மயிலாட்டம்
* பாம்பாட்டம்
* குதிரையாட்டம்
* வேதாள ஆட்டம்
* பேய் ஆட்டம்
* வேடராட்டம்
* குரங்கு ஆட்டம்
* மான் ஆட்டம்
* ஒயிலாட்டம்
* வசந்தன் கோலாட்டம்
* கோலாட்டம்
* கும்மி
* கட்டுக்கரகாட்டம்
* செம்பு கரகாட்டம்
* சிலம்படி ஆட்டம்
* குடமுதல் கும்மி
* அம்பா நடனம்
* முகமூடி ஆட்டம்
* பொம்மல் ஆட்டம்
* தேவராட்டம்

### 2. காவடி

* தாளக்காவடி * தவில் நாதஸ்வரத்துடனான காவடிகள் * பறை மேளத்துடனான காவடிகள்

### 3. வாத்தியக் குழு

* கீழைத்தேச வாத்திய இசைக்குழு ஊர்வலம்
* தவில் நாதஸ்வரக்கச்சேரி ஊர்வலம்
* உடுக்குப்பல சேர்ந்த ஊர்வலம்

(வேறு வகை பாரம்பரிய கிராமியக் கலை நிகழ்வுகளை ஊர்வலத்தில் சேர்த்துக்கொள்ள விரும்புவோர் அனுமதிபெற்று பங்குகொள்ள முடியும்)

ஊர்வலத்தில் இடம்பெறும் பத்து சிறந்த நிகழ்வுகள் தெரிவு செய்யப்பட்டு, தரமான பரிசுகள் வழங்கப்படும்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் பல்கலைக்கழகம், பாடசாலைகள், கலாமன்றங்கள், கலைஞர் குழுவினர், தனிநபர் குழுக்கள் போன்ற அமைப்புக்களைப் பங்கு கொண்டு சிறப்பிக்க முன்வருமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம். பங்குகொள்பவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும். பங்குகொள்ள விருப்பமானவர்கள் கீழ்க் குறிப்பிடப்படும் முகவரிக்கு 20.06.2004 க்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக் கொள்கின்றோம்.

ஊர்வலம், நல்லூர் சட்டநாதர் கோவிலிலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக நல்லூர் துர்க்கா மணி மண்டபம் வரை இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

கலாபூசணம் செ.மெற்றாஸ்மயில், 077 - 6095070
செயலாளர், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்,
21,முதலாவது ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம்.

# கேள்வி அறிவித்தல்
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

1. யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரினால் பின்வரும் வேலைகளிற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலை விபரம் | ஆகக்குறைந்த (ICTAD) தரம் | மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத்தொகை | மீளளிப்புச் செய்யமுடியாத தொகை |
|---|---|---|---|
| குருநகர் தொடர்மாடிக் கட்டட மலசல கூடம். குளி. தாங்கிகள். நீர்வழி விநியோகம் ஆகியவைகளின் திருத்த வேலைகள் - Stage II | M 7 | Rs. 35 000/- | Rs. 750/- |

2. நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரத்தில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
3. இக்ராட் வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதிய கேள்வி ஆற்றலைக் கொண்டிருத்தல் வேண்டும்.
4. கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப் பட்ட இக்ராட் (ICTAD) பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணத் தொகுதிகளை யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் மீளளிப்புச் செய்யக்கூடிய வைப்புத் தொகை ரூபா 35 000/- மும் மீளளிப்புச் செய்யமுடியாத தொகை ரூபா 750/- ஐயும் செலுத்தி 24.06.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிவரை விண்ணப்படிவத்தினையும் BOQ வையும் பெற்றுக்கொள்ளலாம்.
6. கேள்வி ஆவணத் தொகுதிகளை (இணைப் பிரதிகளில்) யாழ்ப்பாணம் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் எல்லா அலுவலக நாட்களிலும் அலுவலக நேரங்களிலும் இலவசமாகப் பார்வையிடலாம்.
7. பொறி வைத்த கேள்விகளைக் கொண்ட தபால் உறையில் இடதுபக்க மேல்மூலையில் 'குருநகர், மாடிவீட்டுக் கட்டடங்களுக்குச் செய்யவேண்டிய அத்தியாவசிய திருத்த வேலைகள் Stage II' என எழுதப்படல் வேண்டும்.
8. பொறியிடப்பட்ட கேள்விகள் 'தலைவர், யாழ். மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் 25.06.2004 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்பாக எங்களுக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். அல்லது இதேமுகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். இதன்பின்னர் கேள்விகள் 25.06.2004 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும் அந்தச் சமயம் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் இருவருக்கு மேற்படாமல் சமுகமளிக்க முடியும்.
9. பொறியிடப்பட்ட கேள்விப் பெட்டி திட்டப் பணிப்பாளரின் அறையில் வைக்கப்பட்டிருக்கும்.

மாவட்டக் கேள்விச்சபை,
மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம்.
03.06.2004

செ.பத்மநாதன்
தலைவர்,
மாவட்டக் கேள்விச்சபை,
யாழ்ப்பாணம்.

(சி-2638)

# பங்களாதேஷுடனான டெஸ்ட் மேற்கிந்திய அணியில் மாற்றம்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகளிடையேயான ஒரு நாள் தொடரை மேற்கிந்தியத் தீவுகள் 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. 2 டெஸ்ட் போட்டித் தொடரில் முதல் டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் - பங்களாதேஷ் அணிகள் இடையேயான 2 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி ஜமேக்காவில் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்தப் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஒரே ஒரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது. தேவ் முகமதுக்குப் பதிலாக ஒமரி பிங்ஸ் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். தென்னாபிரிக்கத் தொடரின் போது பிங்ஸுக்குக் காயம் ஏற்பட்டது.

தற்போது உடல் தகுதி அடைந்திருப்பதால் அணியில் மீண்டும் இடம்பெற்றுள்ளார். 2 ஆவது டெஸ்ட் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணி விபரம் வருமாறு.

லாரா (கப்டன்), சந்திரபோல், கைல், டேவன் ஸ்மித், வெயன் ஸ்மித், ஜேக்கப், பெட்ரோ கொலின்ஸ், லாசன், எட்வர்ட்ஸ், பினோ பெஸ்ட், ரவி ஏகம்பாள், ஒமரிபிங்ஸ்.

## லஞ்சம் கொடுக்க முயன்ற
# இந்திய வீரர் காலேக்கு 7 மாதகால தடைவிதிப்பு



தேர்வாளர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக அபிஜித் காலே மீதான குற்றச்சாட்டு குறித்து விசாரித்த இந்தியக் கிரிக்கெட் சபை ஒழுங்கு நடவடிக்கை குழு, இந்த ஆண்டு இறுதிவரை அவர் கிரிக்கெட் போட்டியில் ஆடத் தடை விதித்தது.

மராட்டிய கிரிக்கெட் அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான அபிஜித் காலே, கடந்த ஆண்டில் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரில் - இந்திய அணியில் இடம்பிடிக்க தேர்வாளர்களுக்கு லஞ்சம் கொடுக்க முயன்றதாக புகார் கிளம்பியது.

தேர்வாளர்கள் பிரணாப்ராய், கிரண்மோரே ஆகியோர், தங்களுக்கு காலே ரூபா 10 லட்சம் கொடுக்க முயன்றதாக கிரிக்கெட் சபையிடம் புகார் செய்திருந்தனர்.

இதைத் தொடர்ந்து இந்திய கிரிக்கெட் சபை அபிஜித் காலேயை இடைநிறுத்தியது. அத்தோடு அவர் மீதான புகார் குறித்து விசாரிக்க குழுவொன்று நியமிக்கப்பட்டது.

காலே மீதான நடவடிக்கை பற்றி முடிவுசெய்ய, இந்திய கிரிக்கெட் சபை ஒழுங்கு நடவடிக்கை குழுத் தலைவர் டால்மியா தலைமையில் கொல்கத்தாவில் நேற்று முன்தினம் கூடியது. 2 மணி நேரம் நடந்த இந்தக் கூட்டத்தில் "இந்த ஆண்டு இறுதி (வருகிற டிசம்பர் 31 ஆம் திகதி) வரை காலே கிரிக்கெட் விளையாட தடைவிதித்து முடிவு செய்யப்பட்டது.

இதனை இந்திய கிரிக்கெட் சபை தலைவர் டால்மியா அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "காலே மீதான புகாருக்கு நேரடி ஆதாரம் இல்லை. அணியில் இடம் பிடிக்க தேர்வாளர்களை அணுகியதை ஒப்புக் கொண்டுள்ள காலே, பணம் பேரம் பேசவில்லை என்று தெரிவித்ததோடு நிபந்தனையற்ற மன்னிப்பும் கோரியுள்ளார்.

அவரது எதிர்கால நலன் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அதிக தண்டனை அளிக்கப்படவில்லை" என்று தெரிவித்தார்.



எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிக்கான தகுதிச் சுற்றுக் கால்பந்துப் போட்டி ஒன்றில் பிரேசில்- ஆர்ஜனரீனா அணிகள் மோதின.

இதில் ரொனால்டோ கோல் அடித்ததை சக வீரர் எட்மில்சன் பாராட்டுவதை படத்தில் காணலாம். இந்தப் போட்டியில் பிரேசில் 3 - 0 என்ற கோல் கணக்கில் வென்றது.

நாகம்ஸ் சுன்னாகம்
மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்
விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
(நீஸ்ஸ்) கில்லி



(சி-2622)
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு 11.00, 3.00, 7.00, 10.00

ராஜா யாழ்ப்பாணம்.
3 ஆவது வாரமாக
இந்தியாவிலும், இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
சூர்யா, சித்தார்த், மாதவன், மீரா ஜாஸ்மின், திரிஷா
நடித்த
ஆய்த எழுத்து



காட்சிநேரம்:-10.30, 2.30,6.30 மட்டும் (பு.நே)
(சி-2623)

நிறஞ்சனாஸ் சங்கானை
சிம்பு, திரிஷா, ரகுவரன், விவேக்
நடித்த
அலை
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி,ஞாயிறு இரவு8.45 (பு.நே)
AMERICAN PIE
(சி-2621)

# தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கு முன்னின்று உழைத்தவர் நடேசன்

## கூட்டமைப்பு எம்.பி. சிவநேசன்



தமிழ் தேசிய எழுச்சிக்கும், அதன் வளர்சிக்கும் உழைத்த பெருமைகள் மூத்த பத்திரிகையாளர் ஜி.நடேசனைச் சாரும்.

- இவ்வாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இ.சிவநேசன் தெரிவித்தார்.

பத்திரிகைளர் நடேசனின் படுகொலையைக் கண்டித்து வெளியிட்ட அறிக்கையிலே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஊடகவியலாளர் ஐயாத்துரை நடேசனின் படுகொலை தமிழ்பேசும் மக்களுக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ் தேசிய எழுச்சிக்கும் அதன் உட்கட்டுமான வளர்ச்சிக்கும் உழைத்த பெருமகன்.

தனது ஊடகவியல் சேவையில் நின்று உண்மையையும், நியாயத்தையும் பக்கச்சார்பற்ற ஓர் நடுநிலைமையாளனாக செயல்பட்டமையினாலேயே 2002ஆம் ஆண்டில் சிறந்த பத்திரிகையாளனாக கௌரவிக்கப்பட்டார்.

இனமுரண்பாடுகள் எனும் நூலின் மூலம் தான் பெற்ற சாகித்திய மண்டலபரிசினூடாகத் தான் ஓர் சிறந்த ஊடகவியளாளன் என்பதை சமூகத்திற்கு வெளிக்காட்டிய பெருமகன்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உருவாகியுள்ள இயல்பு நிலைச் சுழலில் தமிழ் புத்திஜீவிகளும், ஊடகவியலாளர்களும் தொடர்ந்து படுகொலை செய்யப்படுகின்ற நிலை அரச ஆதரவுடனேயே மேற்கொள்ளப்படுகிறது என்பதனை உணர்த்திநிற்கின்றது. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இவ்வாறான இனவாத பிற்போக்கு சிந்தனையுடைய காட்டுமிராண்டித்தனமான படுகொலைகள் தொடர்வதை, எந்த ஒரு மனிதனும் ஏற்றுக்கொள்ள முடியாத ஓர் ஒடுக்குமுறையாகவே கருதப்படுகிறது.

இத்தகைய செயல்களை தொடாரவண்ணம் பாதுகாத்து, சிறந்த ஊடகவியலாளரின் சேவையை பெற்றுக் கொடுப்பதற்கு சிங்கள சகோதர ஊடகவியலாளர்களும், சர்வதேச ஊடகவியலாளர்களும் இலங்கை அரசுக்கு மிகுந்த அழுத்தத்தைக் கொடுத்து பத்திரிகை சுதந்திரத்தை காத்துக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த நிலையில் உயிருக்கு உத்தரவாதமற்ற சூழலில் நடு நிலமை தவறாத சிறந்த ஊடகவியலாளன் ஒருவன் தனது கருத்துக்களை வெளிப்படுத்த முடியாத அச்சுறுத்தல்கள் தொடர்வது பத்திரிகையினுடைய உண்மைத் தன்மையை ஒழிக்கின்ற ஓர் நடவடிக்கையாகவே கருத வேண்டும்.

இந்த நிலை தொடராமல் இருப்பதற்கு அனைவரும் ஒன்றுபட்டு போராடுவதுடன் பத்திரிகைச் சுதந்திரம் இலங்கையில் மீண்டும் உருவாகுவதற்கு வழிசெய்யவேண்டும்.

இராணுவ அச்சுறுத்தல்களின் மத்தியிலும், பல அநாமதேய அச்சுறுத்தல்கள் மத்தியிலும் நடுநிலைமை தவறாது செயல்பட்டு படுகொலை செய்யப்பட்ட மூத்த பத்திரிகையாளர் நடேசனின் பிரிவுத்துயரில் மூழ்கியிருக்கும் அவரது குடும்பத்தாருக்கும், தமிழ் மக்களுக்கும், ஊடகவியலாளர் சமூகத்திற்கும் எனது அனுதாபத்தை தெரிவிப்பதோடு நானும் அத்துயரில் பங்கு கொள்கின் றேன் - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (13)

### தையல் பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

வலி. தெற்கு பிரதேச சபையின் கிராம அபிவிருத்தி மகளிர் நிலையத்தில் கடந்த வருடம் நடாத்தப்பட்ட தையல் பயிற்சி வகுப்பில் கலந்து பயிற்சிகளைப்பெற்ற யுவதிகளுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை ஏழாலை மேற்கு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் கா.தியாகமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதமவிருந்தினராக வலி. தெற்கு பிரதேச செயலர் திருவாகரன் கலந்து கொள்வார். (101)

### நல்லூர் பிரதேச சபையில் இடமாற்றம் பெற்ற மூவர் கடமைகளைப் பொறுப்பேற்பு

அண்மையில் உள்ளூராட்சித் திணைக்களங்களில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்களை அடுத்து, நல்லூர்ப் பிரதேசபைக்கு இடமாற்றம் பெற்ற மூவர் கடந்த முதலாம் திகதி முதல் தமது கடமைகளை பொறுப்பேற்றுள்ளனர்.

யாழ். மாநகர சபையில் இருந்து இடமாற்றம் பெற்று வந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர் எஸ். ராஜரட்ணம் திருநெல்வேலி விவசாய விரிவாக்க அலுவலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுவந்த தட்டெழுத்தாளர் கே.கேதீஸ்வரி, வலி. வடக்குப் பிரதேச சபையில் இருந்து இடமாற்றம் பெற்றுவந்த கணேசானந்தராஜா ஆகியோரே தமது கடமைகளை பொறுப்பேற்றவர்களாவார்கள்.

## உடுவில் அரசினர் வைத்தியசாலையில் மருந்து பொருட்கள் பற்றாக்குறை

(உடுவில்)

உடுவில் அரசினர் பொது வைத்தியசாலையில் சகல மருந்துகளும் தீர்ந்துவிட்டதால் நோயாளர்கள் வெளிக்கடைகளில் மருந்துகளை வாங்க அலைந்து திரிகின்றனர். இவ்வாண்டிற்காக ஒதுக்கப்பட்ட மருந்துகள் கொழும்பிலிருந்து வராததால் குறைந்தளவு மருந்துகளே வழங்கப்பட்டன. அவையும் மிக விரைவில் முடிவடைந்து விட்டன.

அத்துடன் இங்கு மருந்து எழுதிக்கொடுக்கும் கடதாசிக்கும் தட்டுபாடு ஏற்பட்டுள்ளது. இதனால், மருந்து வாங்க வரும் நோயாளர், நோய் வேதனையுடன் மீண்டும் வீடுபோய் காகிதங்கள் எடுத்துவர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் நோயாளரின் வேதனை இரட்டிப்பாவதாகத் தெரிவிக்கின்றனர். (101)

## முல்லை மாணவர் ஒன்றிய சீட்டிழுப்பு முடிவுகள்

யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிஷ்ட லாபச்சீட்டிழுப்பின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

அதன் விபரங்கள் வருமாறு:-

1ஆம் பரிசு - அதிஷ்டயெண் 670. க.மேனகா, முள்ளியவள்ள, 2ஆம் பரிசு - 1291, செ.சுவேந்திரன், பாலிநகர், 3ஆம் பரிசு - 162, கௌசிகா,

ஆறுதல் பரிசுகள் - 5001 அ.சிவலிங்கம் - முள்ளியவளை, 9945 என்.குமரன் - அளம்பில், 15297 - காண்டி, தர்மபுரம், 15809 வி.வினோஜன் - முள்ளியவளை, 16508 கவியன், வளர்மதி நகைமாடம், முள்ளியவளை, 4217 க.சகானா, முள்ளியவளை, 561 த.விதுவிகா - முள்ளியவளை, 15094 பு.புஸ்பன், கிளிநொச்சி, 273 ஏ.சுதாஜினி, புதுக்குடியிருப்பு, 6178 கே.சுதாகரன், முள்ளியவளை - ஆகியோர் அதிர்ஷ்டசாலிகளாகத் தெரிவாகியுள்ளனர்.


இவர்கள் ந.யோகரட்ணம் (G.S.O), வைத்தியசாலை வீதி, 4ஆம் வட்டாரம் முள்ளியவளை எனும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

### பண்டத்தரிப்புக்கு மின்சாரம் வழங்க ரவிராஜ் எம்.பி. சிபார்சு

(சுதுமலை)

இதுவரை காலமும் மின்சாரம் வழங்கப்படாமலுள்ள பண்டதரிப்பு பிரான்பற்று கிராமத்துக்கு மின்சாரத்தை வழங்குமாறு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் சிபார்சுக் கடிதத்தினை வழங்கியுள்ளார்.

ஆலயங்கள், பாடசாலை, வைத்தியசாலை இவற்றுடன் சமூர்த்தி வங்கிச் சங்கமுமுள்ள இந்தக் கிராமத்துக்கு மின்சாரத்தை வழங்மாறு யாழ். மாவட்ட மின்சாரசபை பொது முகாமையாளருக்கு, நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் கடிதம் அனுப்பியுள்ளதாக பிரான்பற்று கிராம மக்கள் தெரிவித்தனர். (91)



தொண்டமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்தில் நிகொட் உதவியுடன் அமைக்கப்படவுள்ள புதிய கட்டடத்துக்கான அடிக்கல்லை நாட்டியபின் திரைநீக்கம் செய்து வைப்பதைப்படத்தில் காணலாம்.

## பெரியார்களைக் கௌரவிக்கும் மரபு யாழ்ப்பாணத்தவரிடம் நிறையவே உண்டு

### ஆறு திருமுருகன் உரை

சமூகத் தொண்டுகள் புரியும் பெரியார்களை கௌரவிக்கும் மரபு யாழ்ப்பாணத்தவரிடம் நிறைய உண்டு. அவர்களுக்கு குருபூசை செய்தல், போட்டி நிகழ்வுகள் வைத்து பரிசு வழங்குதல், சிலை ஸ்தாபித்தல் போன்ற பல நற்பண்புகளைக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத்தமிழர் -கலைக்கும், சங்கீதத்துக்கும், கர்நாடகத்துக்கும் அளப்பரிய சேவையாற்றி வித்துவான் வீரமணி ஐயருக்கு அவர் வாழ்ந்த ஊரில் சிலை நிறுவி என்றும் போற்றவேண்டும்.

இவ்வாறு, அமரர் வித்துவான் வீரமணி ஐயர் ஞாபகார்த்தமாக இணுவில் கந்தசுவாமி கோவிலில் வெளியிடப்பட்ட இணுவில் கந்தன் கீர்த்தனைகள் ஒலிநாடா வெளியீட்டு நிகழ்வில் சிறப்பு உரையாற்றிய செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகன் தெரிவித்தார்.

தமிழகத்தை சேர்ந்த நித்திய ஸ்ரீ மகாதேவனால் இசையுடன் பாடப்பட்டு இராசலிங்கம் திருச்செல்வம் குடும்பத்தினரால் வெளியிடப்பட்ட இந்த ஒலி நாடா வெளியீட்டு இந்த நிகழ்வில் அவர் தொடர்ந்து பேசுகையில் -

வெளிநாடுகளில் புலம்பெயர்ந்து தமிழ் மக்கள் வாழ்ந்தாலும் அவர்கள் இங்கு தமிழுக்கு தொண்டாற்றியவர்களை மறக்காது படங்களாக வைத்து பூஜிக்கின்றனர். இங்கு வாழ்ந்த அவரிடம் பல அறிவுகளைக் கற்றுக்கொண்ட எமது குருவுக்கு நாம் வருடாவருடம் குருபூசை செய்வது கடமை என்றார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத் துறை தலைவர் தேவ ராஜா பேசுகையில் - வீரமணி ஐய ரின் கர்நாடக சங்கீதம் மட்டுமல்ல அவரின் நடிப்புடன் கூடிய ஆடல் திறன் இன்று எவரிடமும் இல்லை. "கற்பக வல்லியின் பொற்பதங்கள் பிடித்தே" என்ற பாடல் மூலம் தனது சங்கீத சாம்ராஜ்ஜியத்தை வெளிப்படுத்திய வீரமணி ஐயர் சைவத்தை விட மற்றைய சமயங்களையும் மதித்து நடந்தார். அவரிடம்சங்கீதம் கற்ற பிறமத மாணவர்கள் கூட மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தனர். தியாகராஜ பாகவதருக்கு விழா எடுப்பதைப்போல எமது கிராம மக் கள் வீரமணி ஐயருக்கும் வருடா வருடம் விழா எடுக்கவேண்டும். அதுவே நாம் அவருக்கு செய்யும் சிறந்த கைமாறாகும் எனத் தெரிவித்தார். (101)

### ஓய்வூதியர்களுக்கான படிவங்களை தபால் மூலம் அனுப்ப ஏற்பாடு

(உடுவில்)

ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்களின் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்குவது தொடர்பான படிவங்கள் அவர்களின் சொந்த முகவரிகளுக்கு தபால் மூலம் அனுப்ப வலி. வடக்கு பிரதேச செயலகம் ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளது.

எதிர்வரும் வாரங்களில் இந்த படிவம் அனுப்பப்பட்டுவிடும். படிவம் கிடைக்காதோர் ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்க உரிய ஆதாரங்களை சமர்ப்பித்து நேரில் பெற்றுக்கொள்ளலாமென வலி. வடக்கு பிரதேச செயலக உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (101)

## சிறந்த பண்ணையாளர் தெரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(உடுவில்)

வருடா வருடம் கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களத்தினால நடாத்தப்படும் சிறந்த கால்நடை பண்ணையாளர்களை தெரிவு செய்யும் போட்டிக்கு இந்த முறையும் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆடு, மாடு, கோழி ஆகியவற்றை வளர்க்கும் பண்ணையாளர்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களை அரசாங்க கால்நடை வைத்தியர் பணிமனையில் பெற்று இம்மாதம் 15ஆம் திகதிக்குமுன் விண்ணப்பிக்குமாறு வலி வடக்கு கால்நடை வைத்தியர் எஸ். மகாதேவன் அறிவித்துள்ளார். (101)

## வடகடல் நிறுவன ஊழியருக்கு சேமலாப நிதி செலுத்தவில்லை

(சுதுமலை)

வடகடல் நிறுவனம் வலை உற்பத்தியை மேற்கொண்டபோதிலும் எதிர்பார்த்தளவு விற்பனைகள் இடம் பெறாமையால் வலைகளின் முடிவுக் கையிருப்பு அதிகளவிலுள்ளது. இதனால் நிதி நெருக்கடியில் செயற்பட்டு வரும் வடகடல் நிறுவனம் கடந்த சில மாதங்களாக ஊழியர் சேமலாப நிதியைச் செலுத்தவில்லை.

35 தொழிலாளர்கள் தொழில் புரியும் இந்த நிறுவனத்தில் கடந்த 15 மாதங்களாக ஊழியர் சேமலாப நிதி செலுத்தப்படவில்லை. இலங்கை மத்திய வங்கிக்கு இந்த நிறுவனம் குறித்த தொகைப் பணத்தை செலுத்த வேண்டியுள்ளது.

உரிய அமைச்சின் கீழ் இல்லாது போதியளவு நிதி ஒதுக்கீடு இன்றி வடகடல் நிறுவனம் செயற்படுவதும் இந்த நிறுவனம் நிதி நெருக்கடியில் செயற்படுவதற்கான காரணமாகலாம் என இங்கு பணியாற்றும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (91)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்



நான்காவது அகவையில்



பெயர் :ஆ.கிருபாகரன்
முகவரி : திருப்பூர், மயிலிட்டி.

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்





# சிநேகிதியே



உமா மகேஸ்வரி

**உலகத் தமிழ் ஆண்டு மலர் 2003 இல் பெண் எழுத்தாளரான உமா மகேஸ்வரி அவருடனான நேர்காணலில் காணப்பட்ட சில கருத்துக்களை வாசகர்களுக்காக இங்கு தருகின்றோம்.**

## சத்தமாக பேசக்கூடத் துணிவில்லாத நிலையில் எழுத்துத்தான் என்னை அடையாளப்படுத்தியது

ஆங்கில இலக்கியத்தில் முதுகலைப் பட்டம்பெற்றவரும் 'மஹி' என்ற புனைபெயரில் சிறுகதைகளை எழுதியவரும், பெண்மையின் தனிமொழியும், தனிமையின் வலியும், இசை லயமும்கொண்ட எழுத்தாளருமான உமா மகேஸ்வரி - இந்தியாவைச் சேர்ந்த பெண் எழுத்தாளர். கவிதைகளை இடையிடையே எழுதுபவர். 'கணையாளி' பத்திரிகை நடத்திய குறுநாவல் போட்டியில் முதற்பரிசு பெற்றவரா வார்.

பெண்கள் உரக்கச் சிரிப்பதோ, பேசுவதோ தடை செய்யப்பட்ட குடும்ப அமைப்பிலே நான் பிறந்து வளர்ந்தேன். அப்போது நான் சொல்ல முடியாத விடயங்களை வெளிப்படுத்தும் சிறந்த சாதனமாகக் கவிதையை உணர்ந்தேன்.

என்னுடைய அம்மா - நான் வழக்கமாக யாரும் செய்யாத ஒரு தேவையற்ற காரியத் தைச் செய்கின்றேன் என்கிற விதமாகவே என் எழுத்து முயற்சிகளைப் பற்றி நினைக் கின்றார். என்னுடைய அப்பாவும் இதே போக்கு டையவர்தான்.

இவை என்னை மிகவும் தனிமைப்படுத் தியது. என் தனிமையின் உளைச்சல் களையே நான் எழுதுகின்றேன். இவை பத்திரிகைகளில் வெளிவருவதில் எப்போதுமே பெற்றோருக்கு உடன்பாடு கிடையாது. அவர் கள் நான் எழுவதைத் தடை செய்வதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாமலிருந்தது. ஒரு கட்டத்தில் என்னமோ செய்யட்டும் என்று விட்டுவிட்டார்கள்.

என்னுடைய மாமியும், மாமனும் தீவிர பழமைவாதிகள், என் கணவர் - என்னுடன் முதன் முறையாகப் பேசியபோது 'கவிதை எல்லாம் எழுதுவியாமே, இனி அதெல்லாம் எதுக்கு? இனிமேல் எழுதவேண்டாம் குடும் பத்தைப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

என் கணவரிடமிருந்து நான் எழுதுவதற்கு உரிய அனுமதியைப்பெற பல வருடங்களா யின. ஆனால், கவியரங்கம் அது, இது என்று வெளியே போகக்கூடாது என்று கண்டிப் பாகச் சொல்லிவிட்டார்.

தடைகள் பெருகப் பெருக உத் வேகம் கூடியது. நான் எழுதுவதும் அது பிரசுரமான பத்திரிகையை நான் மட்டுமே படிப்பதும் ஒரு ரகசியக் காதலா னது.

கவிதையின் உருவாக்கத்தில் உணர்ச்சிகள் மூலகாரணமாக இருக் கும்போது, அவை ஆணுக்கும் பெண் ணுக்கும் பொதுவானவைதான்.

இவை இருந்தபோதும், இயற்கை தந்த உடல் அமைப்பாலும் பால் பேதத்தாலும் ஒரு ஆணுக்கான அனுப வங்கள், பெண்ணுடைய அனுபவங் களிலிருந்து தவிர்க்க முடியாமல் வேறுபடுகின்றன.

அனுபவங்களிலிருந்து எழுதுவதே கவிதை யெனில், பெண்ணின் வலிகள், நுண்ணுணர் வுகளை ஒரு ஆணைக்காட்டிலும் பெண்ணே நுட்பமாக எழுத முடியும். என்றே கருதுகின் றேன். இந்த நிலையில் பெண் கவிஞர்கள் என்று பாகுபடுத்துவதில் தவறோ, தாழ்வோ இருப்பதாக நான் எண்ணவில்லை.

பெண்ணியம் குறித்த வரையறைகளைச் சொல்கின்ற புத்தகங்களை வாசிப்பதற்கு எனக்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை. எனினும், பெண்கள் இரண்டாம் பாலினமாகவும் சார்ந்திருப்பவர்களாகவும் நடத்தப்படுவதை அனுபவ ரீதியாக நான் உணர்கின்றேன்.

பெண்ணின் உடல், மனம், வாழ்வு அது வும் அவருடையதாக இருப்பதற்கான அனு மதி இங்கில்லை. பெண்ணாக இருப்பத னாலேயே உணரும் மனத்தடைகள், இறுக் கங்கள், மரபுவழிக் கடமைகள் இவற்றில் இருந்து மீள விரும்புகின்றேன்.

தற்போதைய கவிதைகளில் பெண்கள் பாலு ணர்வு குறித்து வெளிப்படையாக எழுத முன் வருகின்றார்கள் என்ற கருத்து நிலவுகினறது.

கோபம், பயம், துக்கம், மகிழ்ச்சி போன்ற எல்லா உணர்வுகளையும் போன்றதே பாலு ணர்வும். அதை வெளிப்படுத்துவதற்கு ஒரு தயக்கமும் வேண்டியதில்லை.

நான் என்னுடைய கவிதைகளில் எந்த உணர்வையும் அதிர்ச்சி தரும் பொருட்டு, செயற்கையாக வெளிப்படுத்த முயல்வ தில்லை. இதை எழுதலாம். இதை எழுதக் கூடாது என்று தீர்மானிக்க வேண்டியது எழுது பவர்கள்தான். ஒரு பெண் அவருக்கென்று ஆண்களால் தீர்மானிக்கப்பட்ட சொற்கள், செயல்கள், கருத்தாடல்களையே கடைப்பிடிக் கவும், பயன்படுத்தவும் நிர்ப்பந்திக்கப்படு கின்றாள். அவள் எப்போதுமே ஆணின் தொடர்ச் சியாகவோ, நிழலாகவோதான் இருக்கின்றாள்.

இவ்வாறு ஆண்களால் உருவாக்கப்பட்ட பெண் - பிரதேசத்துக்கு அப்பாற்பட்ட பகுதி களில் நுழைந்துதான் தனக்கான மொழியைக் கண்டு அடைய வேண்டியுள்ளது.

வாசகரை ஈர்ப்பதற்கான கவிமொழி உண் மையான பெண் மனத்தின் மொழியாக இருக்க வேண்டுமென விரும்புகின்றேன்.

மனிதக் கழிவுகளை, மனிதர் அகற்றும் அவலநிலை பற்றிய 'நெடி' என்ற என் சிறு கதை - விருதுபெற்ற சிறுகதையாகும். மலக் கிடங்கை சுத்தம் செய்யும் தொழிலாளர் களைப் பார்க்க நேரிடும் ஒரு பெண்ணின் கோணத்தில் இருந்து, அந்தக் கதை எழுதப் பட்டது. விருதுபெற்ற இந்தக் கதை எங்கள் வீட்டில் நடந்த உண்மைச் சம்பவம்தான்.

எனக்குள்ளேயே குறுகி ஒடுங்கும் பெண் ணாகியே இருந்து வருகின்றேன். என்னைப் பற்றிய உயர்ந்த மதிப்பீடுகளோ, குறைந்த பட்ச தன்னம்பிக்கைகளோ எனக்கிருப்பதில்லை.

சத்தமாகப் பேசக்கூடத் துணிவில்லாத நிலையில் எழுத்துத்தான் என்னை அடை யாளப்படுத்த உதவுகின்றது. ☆

# குழந்தைகள் தன்னம்பிக்கையுடன் வளர....

ஒரு குழந்தை தன்னைத்தானே கவனித் துக்கொள்ளும், தன் தேவைகளைத் தானே பூர்த்திசெய்துகொள்ளும் அளவுக்குத் தன்னம் பிக்கையுடைய குழந்தையாக



மாறச் செய்வது பெற்றோர் கைகளில்தான் இருக்கிறது. இதனை எவ்வாறு கையாள்வது என எண்ணுகிறீர்களா. இதோ சில வழிகள் முயற்சித்துப் பாருங்கள்.

உங்கள் மகளிடம் அல்லது மகனிடம் உங்களுடைய குழந்தைப் பருவம் பற்றிய சுவாரசியமான கதைகளைச் சொல்லுங்கள். ஆர்வமாகக் கேட்பார்கள். அவர்கள் வினாத் தொடுப்பார்கள். சளைக் காமல் பதில் கூறுங்கள். இதன்மூலம் உங்கள் வாழ் கையிலிருந்து தன் வாழ்க் கைக்குத் தேவையான சில விடயங்களைப் பற்றி மறை முகமாக அவர்கள் குறிப் பெடுத்து கொள்வார்கள்.

அந்தப் பிள்ளையைப் பார், பக்கத்து வீட்டு குமா ரைப் பார், பிரியாவைப்பார்.... எப்பவும் அவர்கள் படிப்பிலே கவனம். நீயும் இருக்கிறாயே. என்ற ரீதியில் அவர்களை மற் றக் குழந்தைகளோடு ஒப்பிட் டுப் பேசாதீர்கள். இது அவர் களுடைய தன்னம்பிக்கையை சிதைத்துவிட வாய்ப்புள்ளது. அதேநேரம் மற்றைய குழந்தை கள் மீது வெறுப்பை ஏற்ற படுத்தவும்கூடும். ஒவ்வொரு குழந்தையும் ஒவ்வொரு வகை என்பது நீங்கள் முதலில் புரிந்து கொள்ளுங்கள்.

அவர்களுடைய தனிப்பட்ட விடயங்களில் நீங்கள் தலையிடுவதைப் பெரும்பாலும் தவிர்த்து விடுங்கள். தவறுகள் விடுகிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டால் ஒழிய மற்றும்படி தலையிடாதீர்கள்.

ஓவியம் வரைவது, பாடுவது, நடனம் ஆடுவது என்று அவர்களாகவே ரசித்துச் செய் யும் விடயங்களை மனமாரப் பாராட்டுங்கள். 'அம்மாவே ரசிக்கிறார்..' என்ற எண்ணம் அவர்களுடைய ஆர்வத்தை பல மடங்காக அதிகரிக்கச் செய்துவிடும்.

குழந்தைகளுடைய வேலைகளை அவர் களே செய்துகொள்ளும்படியான சந்தர்ப் பங்களை ஏற்படுத்திக்கொடுங்கள். தன்னால் தன்னை முழுவதுமாகக் கவனித்துக் கொள்ள முடியும் என்ற எண்ணமே அவர்களுடைய வருங்கால வெற்றிக்கான முதல்படி.


ஆண்பிள்ளை என்றால் அவனிடம் எப் பொழுதும் கொஞ்சம் கடுமையாக இருந்தால் தான் நல்லது என்ற எண்ணம் வேண்டாம். குழந்தைகள் எவராயினும் தவறு செய்தால், கண்டிப்பது மற்றைய நேரங்களில் அவர்களி டம் அன்பாக இருப்பதுதான் நல்லது.

குழந்தையின் குறைகள் அது உங் க்களைப் பற்றிய குறைவாகவே இருந்தாலும், காதுகொடுத்து கேளுங்கள். உங்களைப் பற் றிய அவர்களுடைய மனத்தாககங்களில் உணமை இருந்தால் மன்னிப்புக் கேட்கவும் தயங்காதீர்கள்.

குழந்தையின் செய்கைகள் எவையாவது உங்களை எரிச்சல்படுத்தினால், உடனே கத்தி ஆர்ப்பாட்டம் செய்யாமல் எந்த விடயம் எத னால் உங்களை எரிச்சல்படுத்தியது, கோபப் படுத்தியது என்று உணரும்படி அவர்களுக்கு எடுத்துக்கூறுங்கள் எல்லாம் சரியாகிவிடும்.

குழந்தைகள் ஆர்வம் காட்டும் விடயங் களைப் பாராட்டி ஊக்குவிக்க முயற்சி எடுங் கள். ஆனால், அதையே திணித்து அவர் களுக்கு இருக்கும் ஆர்வத்தை மழுங்கடித்து விடாதீர்கள்.

# சிநேகிதிக்கு ஒரு மடல்



**சிநேகிதிக்கு ஒருமடல்**

**அன்புள்ள சிநேகிதியே!**

நலங்களுடன் நாளும் நீ வாழ எந்நாளும் வேண்டி என் மடலைத் தொடர்கிறேன். நானெழுதிய மடலுக்கு நீ வரைந்த பதில்கள் கருத்த ளவில் நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால், ஆழமாகச் சிந்தித்தால் உனது கருத்துக்களின் பின்னே அடக்குமுறை யின் ஆணிவேர்கள் மறைந்திருப்பதை மறுக்கமுடியாது.

உனது பண்பாடு பெண்களை மையப்படுத்தியே வளர்க்கப்பட்டது. என்றும், அந்தக் காலப் பண்பாட்டு விழுமியங்களைக் கட்டிக்காக்கும் காவலர்களாகப் பெண்களே இருக்கின் றார்கள் என எழுதியிருந்தாய்.

சரி, நீ கூறியபடியே இருக்கலாம். அதற்காகப் பண்பாட்டினையும், கலா சாரத்தையும் வெளிப்படுத்தும் சின் னங்களாகப் பெண்களே உள்ளார்கள் என்கின்ற உனது கருத்து ஏற்புடை யதல்ல.

குங்குமமும், தாலியும் ஒரு பெண் ணுக்கு வேலியல்ல. அவள்தான் திருமணமாகியவள் என்பதையும், கணவன் தனது உள்ளத்தில் இருக் கின்றான் என்பதை உணர்த்தும் புற அடையாளங்கள் என எழுதியிருந் தாய்.

இந்தக் கருத்தினை நான் உனது பக்கத்தில் இருந்து பார்க்கின்றேன். ஒரு பெண் திருமணமானவள் என்பதையும், கணவன் உள்ளத்திலே உள்ளான் என்பதையும் வெளிப்படுத் துவதுபோல திருமணமான ஆண் ஏன் வெளிப்படுத்துவது இல்லை எனச் சிந் தித்தாயா?

இந்தப் புற அடையாளங்கள் ஏன் பெண்களுக்கு மட்டும். "ஆம்பிளைப் பிள்ளை சேற்றைக் கண்டால் மிதிப் பான், ஆற்றைக் கண்டால் கழுவு வான்" என ஆணாதிக்கம் பேசும் உனது சமுதாயம் ஒரு பெண்மீது மறைமுக மாக அடக்குமுறைகளைப் பிரயோகிப் பதற்குப் பயன்படுத்தும் வழிமுறை களே இவை.

"கற்பு நிலை என்று சொல்லவந் தார். இரு கட்சிக்கும் அஃது பொது வில் வைப்போம்" எனப் புரட்சிக் கவிஞன் பாரதி கற்பினை ஆணிற்கும் பெண்ணுக்கும் பொதுவாய் வைப்போம் எனப்பாடி உள்ளார்.

இந்த நிலையில் ஏன் பண்பாட் டின் காவலர்களாக ஆண்கள் இருக்க முடியாது என்று எப்போதாவது நீ யதார்த்தமாகச் சிந்தித்தது உண்டா?

சமுதாயத்தின் சிற்பிகளாக இருக் கும் பெண்களுக்குப் பொறுமையும், நிதானமும் அவசியந்தான். அதற்காக அடக்குமுறைகளுக்கு அடங்கிப் போன வர்களாக மட்டுமன்றி, அவற்றை நியா யப்படுத்துபவர்களாகவும் பெண்கள் இருக்கவேண்டியதில்லை.

நண்பியே ஒரு பக்கமாகச் சிந்திக் காதே. நமது பண்பாட்டுக் கோலங் களை மறுபக்கத்திலும் இருந்து நோக் கிக்கொள் எனக்கூறி இந்த மடலை முடிக்கின்றேன்.

அன்புள்ள சிநேகிதி
லெஸ்லி

# பிஞ்சுமுகத்தின் தேடல்

இரண்டு மணிநேரமாகத் தேடுகிறேன். ஒன்றுமே எனக்குக் கிடைக்கவில்லை. காலையிலிருந்து ஒன்றுமே சாப்பிடவில்லை. வயிறு புகைந்து கொண்டிருந்தது எனக்கு. முயற்சியைக் கைவிடவிருப்பமில்லை. இன்றைக்கு எப்படியாவது, ஏதாவது கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் கிளறுகிறேன். மலையைப் போலக் கிடக்கும் குப்பைமேட்டை என்னுடைய கையிலிருந்த தடியால் பக்குவமாகத் தட்டித் தட்டித் தேடுகின்றேன்.


ஒரு நீலக்காற்சட்டை தடியில் கொழுவியபடி வந்தது. எடுத்துப் பார்த்தேன். நல்ல காற்சட்டை, இடுப்புத்தான் கொஞ்சம் பெரிசு. பரவாயில்லை தம்பிக்கு அதைக் கொஞ்சம் சிறிதாக்கிப் போடலாம். எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. நாளைக்கு அவன் அந்த நீலக் காற்சட்டையைப் போட்டுக்கொண்டு பள்ளிக்கூடம் போகும் காட்சியை ஒருமுறை கற்பனை செய்து பார்த்தேன்.

என்னுடைய தம்பிக்கு நல்லசுருட்டை மயிர். நீலக்கண்கள்! கொஞ்சம் முழுசிப்பார்த்தால் பயமாக இருக்கும். சிலவேளைகளில் அவன் முழுசிப்பார்த்தால் பயமாக இருக்கும். சில வேளைகளில் அவன் தன்னுடைய மேல் இமைகள் இரண்டையும் மடித்துவிட்டுப் பார்ப்பான். அசுரனுடைய கண்கள்போல இருக்கும். எல்லோரும் பயந்து ஓடுவார்கள். அவனுக்கு நாங்கள் வைத்த பெயர் கண்ணன். அம்மாவும், அப்பாவும் என்ன பெயர் வைத்தார்களோ தெரியவில்லை. எங்களில் ஐந்துபேர். நான் மட்டும்தான் பெண். அதுமட்டுமல்ல மூத்த பிள்ளையும்கூட. அம்மாவை எனக்கு நிழல் போலத்தான் நினைவிருக்குது. அவளுடைய நெற்றியில் எப்பவும் திருநீறு பூசியிருக்கும். அதனுடைய பளிச் சென்ற வெண்மைநிறம். அதுதான் இன்னமும் கண்ணுக்குள் நிற்கிறது. கை குப்பையைக் கிளறுகிறது. என் நினைவும் கிளறப்படுகிறது.'

எங்களுடைய வீட்டை எனக்குச் சரியாக நினைவில்லை. ஆனால், முற்றத்தில் நின்ற பலாமரம் மட்டும் இப்போது பசுமையாக நினைவில் நிற்கிறது. அம்மா என்னவேலை செய்தாளோ தெரியவில்லை. பகலில் வீட்டில் இருக்கமாட்டாள். பொழுதுபட வருவாள். அப்பாவை எனக்குத் தெரியாது. அவர் வீட்டுக்கு வருவதே இல்லை. எங்களுக்குச் சொந்தக்காரர் என்று யாருமே கிடையாது. எங்களுக்கு நாங்களே உதவி. எல்லோரும் எங்களை வெறுப்பாகப் பார்ப்பார்கள். எனக்கு அது முதலில் விளங்கவில்லை. பின்னர் விளங்கியது.

என்னுடைய அம்மா முறையாகத் திருமணம் செய்யவில்லையாம். "வைப்பாட்டியாம்". எனக்கு அது விளங்கவே இல்லை. ஒருநாள் அம்மா வீட்டுக்கு வரவேயில்லை. நாங்கள் ஐவரும் தனித்துப்போனோம். என்னுடைய கடைசித் தம்பிக்கு அப்போது 2 வயது. அவனை நான் தான் வளர்த்தேன். நாங்கள் இருந்த வீட்டுக்காரர் எங்களை வீட்டைவிட்டு எழும்பிப் போகச்சொல்ல, நாங்கள் ஐந்து பேரும் அகதிகள் போல வெளிக்கிட்டம். தம்பி இடுப்பில், தலையில் இருந்த மூட்டையில் கொஞ்சம் உடுப்பு, மற்ற மூண்டு தம்பிகளும் கையிலை ஏதோ கொண்டு வந்தார்கள். ஐந்துபேருமாக ஒரு செல் அடிச்சு உடைந்து கிடந்த வீட்டிலை குடியேறினம் அன்றிலிருந்து இன்றுவரை உணவு தேடுவதே எங்கள் வேலை. நான் சின்னவனை இடுப்பில் சுமந்தபடி கோவில் அன்னதானங்களிலே இடம்பிடித்து வயிற்றை நிரப்புவேன். தம்பிமார் மூவரும் எங்காவது போய்ச் சாப்பிட்டு விட்டு வருவார்கள். இரவில் எல்லோரும் இடிந்த வீட்டில் படுத்துத்தூங்குவோம்.

ஒருநாள் - என்னுடைய தம்பிமார் மூவரும் திரும்பிவரவேயில்லை. அன்றிரவு நான் நித்திரை கொள்ளவில்லை. சின்னவன் எழும்பி அண்ணாமார் எங்கே என்று கேட்டபோது எனக்கு ஒன்றும் சொல்லத் தெரியவில்லை. இப்போ நாலு வருடம் ஓடிவிட்டது. தம்பியைச் சைவப்பள்ளிக் கூடத்திலை படிக்க விட்டிருக்கிறன். அந்தப் பள்ளிக்கூடத்து அதிபர் நல்லவர். என்னையும் படிக் கவரச் சொன்னார். நான் போகவில்லை. படிக் கப் போனால் சாப்பாடு எப்படித்தேடுவது? அதிபர் தம்பிக்கு ஒவ்வொருநாளும் பணிஸ் குடுக்கிறவராம். அவன் அதிலை பாதியை எனக்குக் கொண்டு வந்து தருவான். நான் நாள் முழுக்க அலைந்துதிரிவேன். கடைத் தெருவிலே கூட்டுகின்ற நேரத்திலே காத்திருந்து கொட்டுப்பட்டுக் கிடக்கும் அரிசியைக் கூட்டியள்ளி வருவேன். அதைத் துப்புரவாக்கி சோறு ஆக்குவேன். கிடைத்த காய்கறிகளையும் அதனுள் போட்டு அவிப்பேன். அதுதான் இரவில் சாப்பாடு. தம்பி இரவில் தான படித்தவற்றை எனக்குச் சொல்லிக் கொடுப்பான். நான் இப்போது கொஞ்சம் படிக்கப் பழகிவிட்டேன். இனனும் சரியாகப் படிக்கத் தெரியாது... என் கையிலிருந்து தடியை எடுத்து கொஞ்சம் ஆழமாகக் குப்பையைக் கிளறினேன்.



இந்தக் குப்பை கிளறும் தொழில் போன வாரம் தொடக்கந்தான் செய்கிறேன். இடம் பெயர்ந்து வந்த பலர் இந்தக் குப்பையைக் கிளறித்தான் தங்களுக்குத் தேவையானவற்றை எடுக்கிறார்களாம். நேற்று ஆருக்கோ 50 ரூபா காசு கிடைத்ததாம். எல்லாம் எங்கடை இடிந்த மண்டபத்திலே வந்து தங்கியிருக்கிறவை சொல்லிய கதைகள். நானும் முயற்சி செய்யப்புறப்பட்டேன்.

என்னைச் சுற்றிலும் ஒரே குப்பை. நானும் எனது தடியை ஊன்றி வேகமாக ஊன்றிக் கிளற அந்த இடத்தில் ஒரு 100 ரூபா நோட்டு மடிந்தபடி கிடந்தது. என் இதயம் படபட வென்று துடித்தது. "கடவுள் எனக்குத் தந்துவிட்டார். என்ரை மனத்தில் வேண்டுதல் செய்தேன். காசை எடுப்பதற்காகக் வலது காலை எடுத்து முன்னே வைத்துப் பெருவிரலைப் பலமாகவே ஊன்றினேன்! படாரென்று.... ஏதோ வெடிக்க நான் குப்பை மேட்டின் மறுபக்கத்தில் போய் விழுந்தேன். என் கால் முழங்காலோடு துண்டாகிவிட்டது. தாங்கமுடியாத வலி. நான்... அம்மா என்று கத்தினேன்.

என் குரல் யாருக்கும் கேட்கவில்லை. ஏதோ ஒரு வாகன இரைச்சல் கேட்டது. நான் என்னுடைய பலம் கொண்டு மட்டும் குரலை உயர்த்திக் கத்தினேன். என் குரலுக்குப் பதிலாக என்மேல் சரசர பைகள் வந்து விழலாயின. எனக்கு விளங்கிவிட்டது. குப்பை என்னை மூடப் போகிறது. 'அரோகரா' என்று கததியபடி என் பலமெல்லாவற்றையும் சேர்த்து உருணடேன். வேகமாக... வேகமாக... நான் உருண்டு மளமளவென கீழே வந்தேன். மல்லாந்து கிடந்தேன். கால்களை அசைக்க முடியவில்லை. கண்களைச் சுழலவிட்டேன். எனக்கு அருகில் ஒரு பல கையில் ஏதோ எழுதப்பட்டிருந்தது. எழுத்துக் கூட்டிப்படித்தேன். மி..தி..வெ..டி..கவ..னம்... தம்பி சொல்லித் தந்தது நினைவுக்கு வந்தது. அக்கா குப்பை மேட்டில் இந்த அறிவித்தல் இருக்கும். நீ அங்கை போகாதை" என் கையில் அவனுக்கு என்று எடுத்த நீலக் காற்சட்டை... அதை இறுகப் பற்றியபடி கடவுளே! என்று கத்தினேன்... யாரோ எனது முகத்துக்கு அருகில் குனிவது மங்கலாகத் தெரிந்தது. அவ்வளவுதான் என் நினைவு மீண்டும் தவறியது...!

மனோன்மணி சண்முகதாஸ்.

# பெண்ணுக்கு

## அழகென்பது எது...



இன்றைய உலகம் வியாபார உலகம். இலாபம் ஈட்டுவதே முக்கிய குறிக்கோள். எது அவசியம் என்பதைவிட எதனை உற்பத்தி செய் விற்பனையைத் தக்க வைக்க முடியும் என்பதே இன்றைய நிறுவனங்களின் அங்கலாய்ப்பு. இந்த அங்கலாய்ப்பின் முதலும், இறுதியுமான தெரிவாக பெண்கள் இருப்பது எம்மில் பலருக்கு தெரி யாத ஒன்று. ஆனால், அதுதான் உண்மை.

# பெண்ணிடமிருந்து...

இந்த உண்மையைப் பெண்களை உணரவிடாமல், பல மாயைகளை உருவாக்கி அவை வெற்றியும் கண்டுவருகின்றன. இதற்காகத் தொடர்வூடகங்களைப் பயன்படுத்தி, தொடர்ச்சியாக தமது பொருட்களை விளம்பரப்படுத்தி, காரியங்களைச் சாதித்துக் கொள்கின்றன. நாமும் இதனைப் புரிந்துகொள்ளாமல் அந்த மாயைக்குள் இழுபட்டு எம்முடைய வசீகரத்தைத் தனித்துவத்தை, தன்னம்பிக்கையை இழநது கொண்டிருக்கிறோம்.

என்ன புரியவில்லையையா? இன்று கடைகளில் பல கிறீம்கள் விற்பனையாகின்றன. அவை எமது கறுப்பு அல்லது மாநிறமான சருமத்தை சிவப்பாக அல்லது வெள்ளையாக மாற்றும் என விளம்பரப்படுத்தப்படுகின்றன. நாமும் அதனை நம்பி அவற்றை வேண்டிப் பயன்படுத்துகிறோம்.

பலன் எமக்குக் கிடைப்பதாகத் தெரியவில்லை. ஆனால், கறுப்பு நிறத்தோலினை சிவப்பாக்குவதாக உறுதிமொழி வழங்கும் நிறுவனங்கள் மட்டுமல்லவா இலாபம் சம்பாதித்துவருகின்றன. இதற்காக இந்த நிறுவனங்கள் சிவப்புத்தான் பெண்களுக்கு அழகு என்ற மாயையை ஏற்படுத்தி, தமது நோக்கத்தினை நிறைவேற்றிக்கொள்கின்றன. இந்த மாயையை ஏற்படுத்துவதற்காக அவர்கள் கையாளும் தந்திரங்கள் ஒரு கறுப்பு அல்லது மாநிறமான பெண்ணைத் தாழ்வுச் சிக்கலுக்குள் கொண்டுசெல்லமுடிகின்றது.

கறுப்பான அல்லது மாநிறமான சருமத்தை வெண்மையாக்கினால் தான் திருமணமாகாத பெண்களுக்கு திருமணமாகும் என்றும், நல்ல தொழில் வாய்ப்புக் கிடைக்கும் என்றும், தமது கிறீம்களைப் பயன்படுத்துவதன்மூலம், பல சலுகைகளைப் பெறமுடியும் என்றும் இவை தொடர்பூடகங்களான பத்திரிகைகள், சஞ்சிகைகள் வானொலி, தொலைக்காட்சி மூலம் விளம்பரப்படுத்துகின்றன.

இந்தச் செய்திகள் தெரிவிக்கும் கருத்து என்ன? ஆழமாகச் சிந்தித்துப் பாருங்கள் புரியும்.

உண்மையில் சருமத்தின் நிறம் முக்கியமல்ல. அதனைப் பற்றிக் கவலை கொள்ளவேண்டிய அவசியமும் இல்லை. அவ்வாறாயின், எது முக்கியம் என்ற கேள்வி எழுவது இயல்பானதே. நாம் சுத்தமானவர்களாகவும், முகமலர்ச்சியுடனும் காணப்படவேண்டும்.

நல்ல எண்ணங்களையும், பண்புகளையும் வளர்த்தெடுக்கவேண்டும். பிறருக்கு உதவும், பிறரைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மையைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும். இதுவே ஒரு பெண்ணுக்கு அழகைத் தரக்கூடியது. சிவப்பானவர்கள் சுத்தமற்றவர்களாகவும், பண்பற்றவர்களாகவும் காணப்பட்டால், அவர்களது சரும நிறத்தைப்பற்றி யார் கவனிக்கப்போகிறார்கள்.

சிவப்புத்தான் அழகு என்பது ஒரு மாயை. நடைமுறை வாழ்க்கையில் ஒருவர் கறுப்பா, சிவப்பா என்பதை எவருமே கருத்திற்கொள்வதில்லை. அவர் நல்லவராக, பழக இனிமையானவரா, உதவக்கூடியவரா என்பதையே முதலில் கவனத்தில்கொள்கிறோம். இப்பண்புகளே பெண்களுக்கு அழகைச் சேர்க்கிறது. மனத்திலிருந்து வெளிப்படும் அழகே புறத்தோற்றத்தையும் தீர்மானிக்கிறது.

கறுத்த அல்லது மாநிறம் கொண்ட பெண்கள் நமது நிறத்தைப் பற்றிக் கவலை கொள்ளாமல், தமக்கு ஏற்றமாதிரி இயற்கையான ஒப்பனைகளைச் செய்துகொள்ளுங்கள். பொருத்தமான உடைகளை தேர்ந்தெடுங்கள். நல்ல பண்புகளை, பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளுங்கள். இந்த நடைமுறைகள் உங்களை மட்டுமன்றி உங்களைச் சுற்றி உள்ளவர்களையும் இந்தச் சிவப்பழகு என்ற மாயையிலிருந்து விடுவிக்கும்.

- இளவெயினி -

# நோய் தீர்க்கும் மருந்தாக கோவா

இன்று அநேகமான பெண்களை தாக்கும் ஒரு நோயாக மார்பகப் புற்றுநோய் காணப்படுகிறது. அத்துடன், இன்று பாடசாலை செல்லும் சிறுவர்களும், வேலைக்குச் செல்பவர்களும் குறித்த நேரத்திற்கு உணவை உற்கொள்ளாதபடியால் 10 வயதிலிருந்து வாயுத்தொல்லை, குடல்புண் (அல்சர்) போன்ற நோய்களுக்கு ஆளாகி வருகின்றனர். நேரத்திற்கு தகுந்த உணவை உள்ளெடுக்காததால், உணவை சமிபாடடையச் செய்யச்சுரக்கும் அமிலங்கள் குடலைத் தாக்குவதால், குடல் புண்கள் தோன்றுகின்றன. இரைப்பையில் வாயுத்தொல்லை ஏற்படுதல் நம்மில் பெரும்பாலானோர் ...நாக்கும் பிரச்சினையாகும்.



...ர்பகப் புற்றுநோய், வாயுத்தொல்லை, ...டற்புண்கள் போன்ற நோய்களுக்கு ...வாரணியாக இப்போது கோவா கண்டு ...பிடிக்கப்பட்டுள்ளது.

பச்சையாக கோவாவை அரைத்து 1/4 கப் சாற்றை தினமும் அருந்துதல் வேண்டும். இவ்வாறாகத் தொடர்ச்சியாக 3 கிழமைக்கு அருந்திவந்தால், ஏனைய மருந்துகளால் குணமாகாத இந்த நோய் ...கள் உடனடியாக பறந்துவிடும் என்கிறார் ...ள் வைத்தியர்கள்.

குடற்புண் நோயினால் பாதிக்கப்பட்டி ...பன்றி ஒன்றுக்குத் தொடர்ந்து இதனைக் ...போது அந்தநோய் உடனே குணமாகியது. ...சாறு வயிற்றில் ஏற்படக்கூடிய புற்றுநோய்கள் ஏனைய நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

பச்சையாகக் கோவாச்சாறு 1/3 கப் அல்லது சமைத்த கோவா 3 மேசைக்கரண்டி தினமும் உட்கொண்டுவருதல் நல்லது. கோவாவின் மேற்புறமாகவுள்ள தடித்த தோலானது, தோல் நோய்களை குணப்படுத்தும். கோவா நோய்களிலிருந்து எம்மைக் காப்பாற்றுவதுடன் முகத்தை அழகுபடுத்துவதாகவும் சீனாவில் செய்த ஆராய்ச்சி ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஆனால், எல்லோருக்கும் கோவாச்சாறு ஒத்துவரும் என்பதை வைத்தியர்களால் நிருபிக்கமுடியாதுள்ளது. சிலருக்கு வயிற்றோட்டம், தசைப்பிடிப்பு, வீக்கம் என்பனவும் இதனால் ஏற்படுகின்ற வாய்ப்புண்டு என்கிறார்கள் மருத்துவர்கள்.

# இந்த வார பலன்கள்

## 04.06.2004 - 10.06.2004 (திருக்கணிதம்)

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சூ பு சுக் | செவ் சனி |
| யுரே | 05 பி.இ. 3-17 மகர-சந்<br>07 பி.இ 5-07 கும்-சந்<br>10 ப.1031 மீன சந் | | |
| நெப் | | | குரு |
| சந் | | கேது | |

### மேடம

*(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)*



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நிம்மதி நிலவும். இன பந்துக்களுடன் கொண்டாட்டங்கள் அதிகரிக்கும். பணவருவாய்கள் தேவைக்குப் போதுமானதாக இருக்கும். கொடுக்கல், வாங்கல் களில் பிரச்சினைகள் இராது. கடன்தொல்லை கள் இருப்பின் அவை நேர்செய்யப்படும். தேக சுகம் பாதிப்படையாது. தொடங்கும் கருமங் கள் தங்குதடையின்றி நிறைவுபெறும். திரு மணம் சம்பந்தமான கருமங்கள் கைகூடும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக் கும். ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் நற் பலனைத்தரும். உத்தியோகத்தர்களுக்கு பலவிதமான முன்னேற்றங்கள் உண்டு. உத்தி யோகம் சம்மந்தமான பிரயாணங்கள் ஏற்பட லாம். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு.

### இடபம்

*(கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகினி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்)*



இடபராசியில் பிறந்தவர்க ளுக்கு குடும்பத்தில் நல்லுறவு ஏற் படும். புத்திரர் வழியால் உதவியும், மகிழ்ச்சியும் உண்டு. பொருளாதார நிலை பாதிப்படையாது. குடும்பப் பெண்கள் புதிதாகப் பொருட்கள் வாங்கிச் சேர்ப்பதில் கவனம் செலுத்துவர். உடல்நிலை பிரச்சினை கள் கொடுக்காது. அடிக்கடி பிரயாணங்கள மேற்கொள்ளவேண்டியிருக்கும். வர்த்தகர்களுக் கும், வாடிக்கையாளர்களுக்கும் வரவு அதிகரி க்கும். வங்கியால் உதவி கிடைக்கும். உத்தி யோகத்தர்களுக்கு தொழில் மாற்றங்கள், பதவியுயர்வுகள் கிடைக்கும். அதிகாரிகள் ஒத்துழைப்பார்கள். சகதொழிலாளர்களின் உத விகளும் கிடடும். மாணவர்கள் கல்வியில் மேம்படுவர். பரீட்சை முடிவுகள் திருப்திதரும்.

### மிதுனம்

*(மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள் )*



மிதுனராசியில் பிறந்தவர்களு க்கு ஏழரைச்சனி நடுப்பகுதி நடக் கிறது. குடும்பவாழ்க்கையில் நிம் மதி குறையும். கணவன், மனைவி யிடையே பூசல்கள் தோன்றி மறை யும். பணச்செலவுகள் அதிகமா கும். தொடங்கிய கருமங்கள் பல இழுபறிக ளின் மேல் நிறைவுபெறும். பிரயாணங்களில் அதிகசெலவு ஏற்படலாம். தேகசுகம் இடையி டையே பாதிக்கப்படும். திருமணப்பேச்சுக்கள் பல சிக்கல்களைக் கொடுக்கும். வர்த்தகர் களுக்கு பழைய முதலீடுகள் தேங்கிக்கிடக் கும். வியாபாரம் மந்தமாகவே நடக்கும். உத் தியோகத்தர்களுக்கு வேலைப்பழு அதிகமா கும். ஒத்துழைப்புக்கள் கிடையாது. மாணவர்க ளுக்கு கல்வி முன்னேற்றம் மந்தமாகவே இருக்கும்.

### கடகம்

*(புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)*



கடகராசியில் பிறந்தவர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். எனினும் வாழ்க்கையில் இடையிடையே அமைதிக்குறைவு காணும். நண் பர்கள், உறவினர்கள் உதவிசெய் வார்கள். செலவுக்கேற்ப பணவரு வாய் கிடைக்கும். தேகசௌக்கி யம் நன்றாக இருக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். புதிய பொருட்களை வாங்குவதில் கூடுதலாக ஈடுப டுவர். விவாகப்பேச்சுக்கள் நன்மையான பல னைத்தரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் நல்ல விலைபோகும். வங்கி உதவிகளும் கிடைக் கும். தொழில்செய்வோருக்கு முதலாளிகளின் ஆதரவு கிடைக்கும். வேலைப்பழு அதிகமாயி னும் சகஉதவிகள் இருப்பதால் எதையும் சமாளிக்கமுடியும். மாணவர்களுக்கு சிறப்பான முன்னேற்றமுண்டு. சிலருக்கு வெளிநாடு செல் லும் வாய்ப்புண்டு.

### சிங்கம்

*(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)*



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கையில் அமைதி குறைவாகவே இருக்கும். நண்பர் கள், உறவினர்களால் சில துன் பங்கள் தோன்றக்கூடும். பிள்ளை களால் செல வுகள் அதிகரிக்கும். தேகசுகம் இடையிடையே பாதிப்புக்களை கொடுக்கும். வைத்தியச் செலவுகள் அதிக மாகும். அடிக்கடி பிரயாணம் செய்வதால் செலவுகள் அதிகரிக்கும். திருமண விடயங் கள் தள்ளிப்போகும். வர்த்தகர்களுக்கு எதிர்பார்த்த இலாபம் கிடையாது. வங்கி உத விகளும் இழுபறியில் இருக்கும். பொருட்க ளில் சேதம், திருட்டு என்பன நடக்கக்கூடும். உத்தியோகத்தர்களுக்கு அலைச்சல் பிர யாசை கூடுதலாக இருக்கும். பொறுப்புக்களும் அதிகமாகும். இயந்திரங்க ளில் வேலைசெய் வோர் அவதானமாக இருக்கவும்.மாணவர்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாதநிலை இருக்கலாம். திருப்தி குறையும்.

### கன்னி



*(உத்தரம் 2, 3, 4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1, 2 ஆம் பாதங்கள்)*

கன்னிராசியில் ஜனனமான வர்களுக்கு, தொழில் சிறப்பாக நடக்கும். இல்வாழ்க்கை அமை தியாக நடக்கும். புத்திரர் வழியில் முன்னேற் றம் காணப்படும். உறவினர்களுடன் கொண் டாட்டங்கள் அதிகரிக்கும். திடீர் பணவரவு ஏற்படலாம். திருமணங்கள் நிச்சயிக்கப்பட வாய்ப்புக்கள் உண்டு. தேகாரோக்கியம் பேணப்படும். கொடுக்கல், வாங்கல்களில் பிரச் சினைகள் வராது. வர்த்தகர்களுக்கு புதிய முதலீடுகள் அதிகலாபத்தைக் கொடுக்கும். பழையகடன் பாக்கிகள் வந்துசேரும். புதி தாக தொழில் வாய்ப்பைத் தேடுபவர்களுக்கு நற்பலன் கிடைக்கும். உத்தியோகத்தர்க ளுக்கு அதிகாரிகளின் ஆதரவும் உண்டு. வசதியான இடமாற்றங்கள், சம்பள உயர்வு கள் கிட்டும். மாணவர்களுக்கு முன்னேற்றம் உண்டு. சிலருக்கு உயர்கல்வி வாய்ப்புக் கிட்டும்.

### துலாம்

*(சுவாதி , விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)*



துலாராசியில் பிறந்தவர் களுக்கு தொழில் முறையில் பிரச்சினைகள் இருக்காது. சில சந்தர்ப்பங்களில் குடும்பத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட லாம். பணச்செலவு கூடுதலாக இருக்கும். தேகாரோக்கியத்தில் கவனம் செலுத்தவேண் டும். திருமண விடயங்கள் கடைசி நேரத்தில் கைநழுவிப்போகும். பிரயாணங்களைக் குறைத்துக்கொள்வது நன்று. வர்த்தகர் களுக்கு வியாபார விடயங்கள் எதிர்ப்புக்கள், போட்டிகள் இருக்கும். வியாபாரமும் குறை வாகவே இருக்கும். பணவருவாயும் குறையும். உத்தியோகத்திலுள்ளவர்களுக்கு வேலை மாற்றம், வேலைப்பழு கூடுதலாக இருக்கும். அதிகாரிகளின் வெறுப்பைத் தேடிக்கொள் ளாது நடப்பது நன்று. மாணவர்கள் கல்வியில் கூடியகவனம் செலுத்தவேண்டும். வெளிநாட் டுப் பிரயாணங்கள் கைநழுவிப்போகும்.

### விருச்சிகம்



*(விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)*

விருச்சிக ராசியினருக்கு அட்டமத்துச் சனியும், பத்தில் வியாழனும் இருப்பதால் குடும் பத்தில் களத்திரசுகம் இருப்பி னும், இடையிடையே கருத்து வேற்றுமை காட்டும். கருமங்கள் நினைத்தபடி நிறைவே றாது. பணவரவு இருப்பினும், செலவுகள் கட் டுக்கடங்காமல் இருக்கும். குடும்பப் பெண்கள் நிதானமாகவும், சிக்கனமாகவும் நடக்கவேண் டும். உடல் நலத்தைப் பேணிக்கொள்ளவேண் டும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். எதிர்பார்த்த இலாபம் கிடையாது. முதலீடுகளால் போதிய பலன் கிடையாமற் போகலாம். உத்தியோகத்தர்கள் நன்கு சிந் தித்து பணியாற்றவேண்டும். அதிகாரிகளின் ஒத்துழைப்புக் கிட்டாது. பொதுக்கருமங்களில் ஈடுபடுவோர் அவதானமாகச் செயற்படவும். மாணவர்கள் கடுமையாக ஊக்கமெடுத்தல் நன்று. சித்திபெறக்கூடிய உழைப்புத்தேவை.

### தனுசு



*(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)*

தனுசுராசியில் பிறந்தவர் களுக்கு குடும்பத்தில் வாக்கு வாதங்கள், சச்சரவுகள் தோன்ற இடமுண்டு. நண்பர் கள், உறவினர்களால் தொல் லைகள் ஏற்படும். போதிய வருமானமின்மை யால் துன்பப்பட நேரிடும். தொழில்அலைச்சல், பிரயாசை கூடுதலாக இருக்கும். தேகசுகம் இடையிடையே பாதிக்கப்படலாம். திருமணம் சம்பந்தமான பேச்சுக்கள் முடிவுறாமல் இழுப டும். வியாபாரிகளுக்கு வியாபாரம் சிறப்பாக விராது. வெளிநாட்டு வர்த்தகம் சிறப்பாக இல்லை. வருவாய் குன்றும். உத்தியோகத் துறையினருக்கு பொறுப்புகள் அதிகமாகும். ஊழியர்களிடையே வாக்குவாதங்கள் தென்படும். உயர்ச்சிகள் குன்றும். மாணவர் கள் பாடங்களில் கவனக்குறைவாக இருக்கும். எதிர்பார்த்த சித்திகிடையாது.

### மகரம்

*(உத்தராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள் திரு வோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்)*



மகரராசியினருக்கு குடும் பத்தில் அந்நியோன்னிய உறவு அதிகமாகும். உறவி னர்களிடையே கொண்டாட் டங்கள் அதிகமாகும். பணப் புழக்கம் தாராளமாக இருக் கும். எனினும், கடன்தொல்லைகளும் தொட ரும். புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். பெரி யவர்களின் ஆதரவு உண்டு. வீட்டில் சுபநிகழ் வுகள் நடக்கலாம். திருமணப் பேச்சுக்கள் காலதாமதமாக நிறைவுபெறும். வர்த்தகர்கள் பழைய முதலீடுகள் விற்பனையாகும். வாடிக் கையாளர்கள் கூடுதலாக வருவார்கள். கடன் உதவிகளும் கிடைக்கும். உத்தியோகத் துறையினருக்கு வேலைமாற்றம், உயர்ச்சி கிடைக்கலாம். சிலருக்கு வசதிகூடிய இடமாற் றம் கிடைக்கலாம். மாணவர்கள் கல்வியில் ஊக்கத்துடன் நடந்துகொள்வர். சித்திகள் திருப்தியாக இருக்கும்.

### கும்பம்

*(அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் பாதங்கள)*



கும்பராசியில் பிறந்தவர்க ளுக்கு குடும்பசுகம் சிறப்பாக இல்லை. இடையில் கருத்து வேற்றுமைகள் தென்படும் பிள்ளைகளால் செலவுகள் அதிகரிக்கும் தேகாரோக்கி யம் பேணிக்கொள்ள வேண் டும்.கொடுக்கல், வாங்கல்க ளில் அவதானம் தேவை. இனபந்துக்களி டையே சச்சரவுகள் தோன்றலாம். விவாகப் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளோர் விரக்தியடை வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மத்திமமா கும். புதிய முதலீடுகள் செய்வதற்கு பண வசதியிராது. வங்கி உதவியும் உரிய நேரத் தில் கிடையாது. உத்தியோகத்தர்கள் அதிக வேலைப்பழுவைச் சுமக்கநேரும். தொழில் மாற்றங்கள் நன்மைதராது . மாணவர்களுக்கு உயர்ச்சி குறைவாக இருக்கும். விளையாட் டுக்களில் கூடியநாட்டம் இருக்கும்.

### மீனம்

*(பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி)*



மீன ராசிக்காரருக்கு குடும் பத்தில் பிரச்சினைகள் ஏற்படுவதற்கில்லை. சகோ தர ஒற்றுமைகளும், இனசன உதவிகளும் இருக்கும். பணவருவாய் தேவைக் கேற்ப கிடைக்கும். தேகாரோக்கியம் சுமாராக இருக்கும். பெண் பாலாருக்கு சில சுகக்குறை வுகள் தோன்றும். தேகநிலையைக் கவனித் துக் கொள்ளுதல் நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் ஓரளவு நடக்கும். முதலீடுகள் எப்படியும் தேங்கிக் கிடக்கும் கொடுக்கல், வாங்கல்களில் அவதானம் தேவை. உத்தி யோகத்தர்களுக்கு சிரமத்துக்கேற்ற வருமானம் கிடையாமற் போகலாம். அதிகாரி களின் வெறுப்புக்கு ஆளாகாமல் நடப்பது நன்று. மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றம் சுமாராக இருக்கும். சிலருக்கு தொழில்வாய்ப்பு கிடைக்கலாம்.

செய்திக் கட்டுரை — பட்டனைந்து

# குருநகர்ப் பிரதேசத்தை பெருநகராக்கும் திட்டங்கள்

(நேற்றைய தொடர்ச்சி)

**அங்கீகாரமற்ற கட்டடங்கள்.**

1. எதிர்காலத்தில் வீதிகளுக்கும் வடி கால்களுக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக அமையும் கட்டடங்கள், மதில்கள், மலசலகூடங்கள் போன்ற வேலைகளைக் கட் டுப்படுத்தி ஒழுங்கமைத்தல்.

2. பொது இடங்களையும் பொது மைதா



ணங்களையும் பாதிக்கும் அத்துமீறிக் குடியே றலைத் தடுத்து நிறுத்தல்.

**சமூக அபிவிருத்தி.**

1. விதவைகள், பெண்களுக்கான தையல் பயிற்சி நிலையங்களை நிறுவுதல்.

2. கைத்தறி நெசவாலைகளையும், மீன்பிடித்துறைசார் குடிசைக் கைததொழில் முயற்சிகளையும் ஊக்குவித்தல்.

3. சிரமதானப் பணிகளை முன்னெடுப் பதற்கான ஆளணிகளையும், உபகரணங்களை யும், இயந்திர சாதனங்களையம் வழங்கி உத வுதல்.

4. முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஊக்கு விப்பு தொகைகளையும், உதவிக் கொடுப்பன வுகளையும் வழங்க நடவடிக்கை எடுத்தல்.

**ஏனைய உட்கட்டமைப் புகள்**

1. வீதிகளிலும், சந்திகளிலும் வீதியோர மின் விளக்குகளை பொருத்துவதற்கு ஆவன செய்தல்.

2. வீதிகளுக்கு பெயர்ப்பலகை நாட்டுதல்.

3. எதிர்காலத்தில் பொதுககடடடங்களாக கடலுணவு பதனிடுதல், கடலட்டை பதனிடுதல், தொழிற்சாலைகளையும் சந்தைப்படுத்தல். நிலை யங்களையும் அமைப்பதற்கான திட்டவரைபு களை உள்ளடக்குதல்.

4. இடிதாங்கிகளையும், வெளிச்சவீட்டுக் கட்டடங்களையும் புனரமைதது மீனவர்களின் நலன் பேணும் திடடங்களை நடைமுறைப் படுத்தல்.

5. பொது இடங்கள் மக்கள் குடியிருப்புக் கள் மத்தியில் அமைந்துள்ள அனுமதியற்ற மதுபானசாலைகளை தடைசெய்து அப்புறப் படுத்துதல்.

6. கடந்த சில மாதங்களாக மூடிக்கிடக்கும் குருநகர் பொதுநூலககிளையை மீண்டும் திறப்பதற்கு ஆவனசெய்தல்.

**மீள் குடியேற்றத் திட்டம்.**

கரையோர இராணுவ அதியுயர பாது காப்பு வலய வேலிக்குட்பட்ட 200 இற்கும் மேற்பட்ட மக்கள் குடியிருபபுக்களை விடுவிக் கவும், சேதமடைந்துள்ள வீடுகளை புனரமைப் பதற்கும், வீடமைப்புத் திட்டங்களை நடை முறைப்படுத்தல்.

**துறைமுக அபிவிருத்தி**

குருநகர்ப் பகுதியிலுள்ள மீன் பிடித் துறைமுகங்களை புனரமைக்கவும், நவீன முறையிலான துறைமுக வசதிகளை உள்ள டக்கும் திட்டவரைவைப் பேணல்.

**விளையாட்டு அரங்கும், மண்டபமும்**

சிறுவர்கள், இளைஞர்கள், முதியோா பயன்படுத்தக்கூடிய உள்ளரங்க, பொழுது போக்கு மண்டபம் ஆகியவற்றை அமைக்க நடவடிக்கை எடுத்தல்.

**உல்லாச அமைவிடம**

யாழ். பண்ணைப் பாலத்தை அண்மித்த கரையோரப் பகுதியை, உல்லாசப் பயணிகள் கவரக்கூடிய வகையில் அழகுபடுத்தி சுற்றுலா உல்லாசப் பயணிகளை வரவழைக்கும் கண் கவர் பிரதேசமாக ஆக்குதல்.

**நகர மண்டபம் அமைத்தல**

யாழ்.மாநகரசபை மற்றும் மண்டபம், காரி யாலயங்கள் அடங்கிய தொகுதிகளை அந்தந்த இடங்களில் நிறுவி மின்புனரமைப்புச் செய்து யாழ். பிரதான வீதியில் முன்னரைப் போன்று நிமிர்ந்து நிற்கும் கட்டடங்களைக் கட்டி எழுப்ப உடனடியாக நடவடிக்கைகளை முடுக்கி விட வேண்டும்.

அத்துடன், யாழ். நகரையும், நகரை அண் மித்த புறநகர்ப் பகுதிகளும் அடித்தள நவீன வடிகால்களையும்,பொதுமலசல வெளியேற்ற மையங்களை அமைத்தல் வேண்டும். நகர் புதுப் பொலிவுடன் திகழும் நாட்களைத் தூரப் போடல்கூடாது.

அரியாலை கிழக்கு, பூம்புகார், மணியம் தோட்டம், உதயபுரப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து மீளவும் குடியமர அனுமதிக்கப் படாததால் 600 இக்கும் மேற்பட்ட குடியிருப் பாளர்கள் குருநகரிலும், அண்மித்த பகுதி களிலும் தற்காலிகமாக வாழந்து கொண்டிருக் கிறார்கள்.

இதனால், நெருக்கடி சூழ்ந்த குருநகர்ப் பிரதேசத்தில் மென்மேலும் நெருக்கடியான குடியிருப்புக்கள் தோன்றி வருவதனால் சமூ கச் சீரழிவுகளைப் பிறப்பிக்கக்கூடிய பகுதி யாக மாறிவருகின்ற அபாயமும் ஏற்பட்டுள் ளதை உணர்ந்து மிகவிரைவாக ராணுவ அதியுயர்பாதுகாப்பு வலயங்களுக்குள் அகப் பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்களை மீட்டெ டுத்துக் கொடுத்தல் தார்மீக சிந்தனையுள்ள அனைவருக்கும் உள்ளபொறுப்பாகும்.

குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர் அதிகாரிகள் கவனத்திற்கு இந்த விடயத்தை காணிக்கை ஆக்கி உள்ளேன்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தீயவை தீய பயத்தலால் தீயவை*
*தீயினும் அஞ்சப் படும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒப்பந்தம் மற்றொரு அபாயத்திற்கான சமிக்ஞையா?

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு பதவியேற்ற நாள்முதலாக அதற்கும் இந்திய அரசுக்குமிடையிலான தனிப்பட்ட முறையிலானதும், ராஜதந்திர ரீதியிலானதுமான உறவுகள் புதிய இலக்குடனும், வீச்சுடனும் மாற்றம் கொள்ளத் தொடங்கியுள்ளது.

இங்கே கவனிக்கப்படவேண்டிய விடயம் என்றால் இங்கு உறவுகள் என்று குறிப்பிடப்பட்டுள்ள பதத்தின் தன்மையேயாகும். இந்த உறவுகள் என்ற சொல் 'நாடுகளுக்கிடையேயான' என்ற அர்த்தத்தை விடவும், ஆட்சியினருக்கு இடையேயான உறவுகள் என்ற அர்த்தத்தையே கொண்டுள்ளதாக உள்ளது என்றே கூறவேண்டும்.

நாடுகளுக்கிடையேயான - குறிப்பாக அயல்நாடுகளுக்கு இடையேயான உறவுகள் என்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை அந்தந்த நாடுகளின் வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்கள், அந்தந்த நாடுகளின் புவிசார் அரசியல் அபிலாஷைகளுக்கேற்ப தொலைநோக்கு சிந்தனையுடன் திட்டமிட்டு உருவாக்கப்படுவதேயாகும்.

இந்த உறவுகள் ராஜதந்திரத்தை அடிப்படையாகக் கொண்டவைகளாம். இதில் அந்த நாடுகளின் அரசியல் நலன்கள், பாதுகாப்பு நலன்களோடு - அதாவது இராணுவ நலன்களோடு சமாந்தரமாக வைத்தே மதிப்பீடு செய்யப்படும்.

பாதுகாப்பு நலன்களைப் புறக்கணித்து மேற்கொள்ளப்படும் அரசியல் நலன் பேணும் சமகாலத் தேவைகளை மட்டுமே கருத்தில் கொண்ட உறவுகள் எந்த நாட்டினதும் தேசிய நலன்களை கருத்தில் கொண்டவையாக இருக்கமுடியாது.

இந்த உறவுகளின் அடிப்படையில் குறுகிய அரசியல் இலாபங்களை எட்ட மேற்கொள்ளப்படும், நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களோ, உடன்பாடுகளோ அந்தக் காலகட்டத்தில் அந்த ஆட்சியாளர்களின் அரசியல் தேவைகளுக்கு அவசியமானவையாக இருக்கலாம் அல்லது தவிர்க்கமுடியாத நடவடிக்கையாகவும் இருக்கலாம். என்றாலும் அவற்றினால் அந்த நாடுகளின் தேசிய நலன்கள் நீண்டகால அடிப்படையில் பாதுகாக்கப்படும் என்று வரையறை செய்துவிடமுடியாது.

ஒரு நாட்டின் சமகால ஆட்சியாளரின் இலக்குகளுக்கமையவும், சில உடனடித் தேவைகளுக்கேற்பவும் அவசர அவசரமாக மேற்கொள்ளப்படும் ஒப்பந்தங்களின் எதிரொலிகள் உடனடியாக சில அனுகூலங்களை ஏற்படுத்தும் தன்மை கொண்டதாக இருக்கலாம். ஆனால், நீண்டகால நோக்கில் அவற்றினால் உண்டாகும் தாக்கங்கள் அந்த நாட்டின் தேசிய நலன்களுக்கு மாறான விளைவுகளை ஏற்படுத்தும் அபாயமும் உண்டென்பதை, உடன்பாடு மற்றும் ஒப்பந்தங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள் சரியாக உணர்ந்துகொள்ளத் தவறிவிடுகிறார்கள் என்றே கூறவேண்டும்.

வரலாற்றில் இத்தகைய தவறுகளை மேற்கொண்ட எத்தனையோ நாடுகளின் அரசியல் தலைமைகள் அதனால் ஏற்பட்ட எதிர்விளைவுகளுக்கு அதிகளவில் முகங்கொடுக்க வேண்டிய அவலத்தைச் சந்திக்க நேர்ந்ததுடன், அந்தந்த நாடுகளும் அதன் காரணமாக பல அவமானங்களை எதிர்கொள்ளவும் நேர்ந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதற்கு ஒரு குறிப்பிடத்தக்க உதாரணம் இந்திய - இலங்கை உடன்பாடாகும். ஒரு நாட்டின் உள்பிரச்சினையான இன முரண்பாடுகள், மோதல் நிலையைக் கடந்து யுத்த நிலையை எட்ட நேர்ந்தபோது, அதனையே காரணமாக வைத்து அந்தப் பிராந்தியத்தில் தனது ஆதிக்க வலுவை நிலைநாட்ட தருணம் பார்த்திருந்த வல்லாதிக்க சக்தியொன்று அந்த நாட்டில் அமைதியை நிலைநாட்டவெனக் கூறிக் கொண்டு அந்த பிரச்சினைக்குள் தனது அபிலாஷைகளுக்கேற்ப மூக்கை நுழைத்து நியாயமற்ற முறையில் பக்கச்சார்பான உடன்படிக்கையை ஆட்சியாளருடன் மேற்கொண்டால் அதன் விளைவுகள் என்ன ஆகும் என்பதற்கு அது ஒரு ஆதார சாட்சியான வரலாற்றுச் சம்பவமாகும்.

இந்திய - இலங்கை உடன்பாடு இந்தியாவைப் பொறிக்குள் வீழ்த்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா செய்த ஒரு சதி என்பதை இந்தியா உணராமல்போனது ஒரு வரலாற்றுத் துயரமேயாகும். அது பற்றி எழுத வேண்டிய அவசியமே இல்லை.

அந்த உடன்பாட்டால் ஏற்பட்ட பாதிப்புக்களால் நஷ்டமடைந்ததும், அவமானப்பட்டதும் இந்தியாதான்...

இந்தியாவுக்கும் இலங்கைத் தமிழர்களுக்குமான பாரம்பரிய கலாசார மற்றும் பண்பாட்டுத் தளத்துடன் கூடிய 'தொப்புள் கொடி' உறவை அந்த உடன்பாட்டின் மூலம் பாதிப்படையச் செய்ததில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா வெற்றிகண்டார் என்பது இந்திய இராஜதந்திரத்திற்கு ஏற்பட்ட தோல்வியாகும்.

அது நடந்து ஒன்றரை தசாப்தத்திற்கும் மேலாகிவிட்ட நிலையில், இப்போது சமாதான முன்னெடுப்புக்கள் ஒரு தீர்க்கமான கட்டத்தை எட்டி, அரசுக்கு ஒரு நெருக்கடி நிலை தோன்றியுள்ள நிலையில், மற்றொரு உடன்படிக்கைக்கான - பாதுகாப்பு ஒப்பந்தத்திற்கான முயற்சிகளில் இந்தியாவும், இலங்கையரசும் தீவிரமாக செயற்படத் தொடங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.


அதற்கான பரிந்துரைகளை இந்திய அரசு இலங்கையிடம் கையளித்துள்ள நிலையில், விரைவில் அவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்படும் என்றும் தெரியவந்துள்ளது.

போர் ஓய்ந்து அமைதி நிலவும் வேளையில், சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசும் - சர்வதேச சமூகமும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ள சூழலில் இலங்கையின் பாதுகாப்புக் குறித்து அரசு ஏன் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்ய அவசரப்படவேண்டும்?

இந்தியாவும் அதற்கு ஏன் முனைப்புக் காட்டவேண்டும்?

இக்கேள்விகள் குறித்த சிந்தனைகள் மற்றொரு இந்திய, இலங்கை ஒப்பந்தம் குறித்த எச்சரிக்கை நிலையை தமிழ் மக்களுக்கு உணர்த்தவே செய்கின்றது.

# நாடும் நடப்பும்




# பாடசாலை நாட்களில் ஆசிரியர்கள் பிரத்தியேக வகுப்புகள் நடத்தத் தடை

பாடசாலை நாட்களில் ஆசிரியர்கள் எந்தக் காரணம் கொண்டும் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தக் கூடாது என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான அறிவுறுத்தல்கள் பாடசாலை அதிபர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு கல்வி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ளது.

பாடசாலை நாட்களில் மாணவர்கள் மேலதிக தனியார் வகுப்புக்களுக்கு செல்வதுடன், ஆசிரியர்கள் பாடசாலை நடைபெறும், நேரங்களில் காசு பெற்று பிரத்தியேக வகுப்புக்களை நடாத்தி வருவதாக கல்வி அமைச்சுக்கு பல புகார்கள் வந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. (122)

## அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவுக்கு 200 கோடி ரூபா தேவையென மதிப்பீடு

அரசினால் அதிகரிக்கப்பட்ட ஓய்வூதியக் கொடுப்பனவை வழங்குவதற்கு 200 கோடி ரூபா தேவைப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை நாடளாவிய ரீதியில் தற்போது ஓய்வூதியம் பெறும் சுமார் 3 இலட்சம் பேரின் சம்பள முரண்பாடுகள் இந்த வருடத்தில் தீர்க்கப்பட்டு வருமென ஓய்வூதியப்பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ண தெரிவித்தார். 31-12-1996 இக்கு முன் ஓய்வூபெறற அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் இதனடிப்படையில் தீர்க்கப்படவுள்ளது.

இந்த ஓய்வூதிய முரண்பாட்டைத் தீர்ப்பதற்கான பயிற்சிகள் ஓய்வூதியத் திணைக்களத்தினால் பிரதேச செயலகங்களில் ஓய்வூதிய கடைமையினை மேற்கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. (122)

## வாய்பேசாத சிறுமியொருத்தி வல்லுறவுக்கு பின் கொலை!

வாய்பேசமுடியாத சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொலை செய்த சம்பவமொன்று வவுனியா, தாண்டிக்குளத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

தாம் வளர்த்து வரும் ஆடுகளை மேய்ப்பதற்காக அருகில் இருந்த பற்றைப் பகுதிக்குச் சென்ற சிறுமியே பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்ட நிலையில் பற்றைக்குள்ளிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றதாக சிறுமியின் பெற்றோர் தெரிவித்தனர்.

கிருபாகரன் ஜெனித்தா (வயது15) என்ற சிறுமியே இவ்வாறு பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டவராவர்.இந்தக் கொலை தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அனுமதியின்றி மண் ஏற்றுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

### சண்டிலிப்பாய் பிரதேச செயலர் எச்சரிக்கை

(வலிகாமம்)

வலிகாமம் தென்மேற்குப் பகுதியில் அனுமதியின்றி மணல் மண் அல்லது ஊர் மண் வாகனங்களில் ஏற்றிச் செல்வது கண்டுபிடிக்கப்பட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வலி.தென்மேற்கு பிரதேச செயலர் ஆ.சுப்பிரமணியசர்மா எச்சரித்துள்ளா.

கட்டுடைப்பகுதியில் மணல் மண் அகழப்பட்ட பிரதேசங்களைப பார்வையிட்ட பின்னர் அவர் இதனைத் தெரிவித்தார்.

மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு அண்மையில் மணல் மண் அகழ்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் பனை, தென்னைமரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளன.

உழவு இயந்திரங்களில் அல்லது வேறு ஏதாவது வாகனங்களில் மண் அகழப்பட்டு கொண்டு செல்வது கண்டுபிடிக்கப்பட்டால், அதில் சம்பந்தப்பட்டோர் அனைவரினதும் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டு வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டு, அவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். (44)

## ஆணையாளர் அனுமதித்தும் பயன் ஏதும் இல்லை

### வடகடல் ஊழியர்கள் கவலை

வடகடல் நிறுவனத்திலிருந்து அரை நாள் சம்பளத்துடன் இடைநிறுத்தப்பட்ட தொழிலாளர்களை மீண்டும் முழுச் சம்பளத்துடன் உள்வாங்குமாறு தொழில் ஆணையாளரால் அனுமதி வழங்கியும், கடந்த மூன்று மாதமாக பதினொரு தொழிலாளர்களையும் நிறுவனம் உள்வாங்கவில்லை.

கடந்த பன்னிரண்டு வருடங்களாக அரை நாள் சம்பளத்துடன் தொழிலின்றி இருந்த தொழிலாளர்களுக்கு கடந்த 22.03.2004 அன்று தொழிற் திணைக்கள ஆணையாளர் டி.எம்.எஸ்.· திஸநாயக்கா உடனடியாக வேலையில் முழுச் சம்பளத்துடன் இணைத்துக் கொள்ளுமாறு நிறுவன பொதுமுகாமையாளருக்கும், பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் பிரதிநிதிகளுக்கும் எழுத்து மூலமாக அறிவித்தார்.

தகுதியும், அனுபவமும், திறமையுமுள்ள இந்தத் தொழிலாளர்கள் இதுவரை காலமும் உள்வாங்கப்படவில்லை. இதற்கு நிறுவன முகாமையாளர் முரண்பட்ட கருத்துக்களை தெரிவித்து வருவதாக பாதிக்கப்பட்ட தொழிலாளர்களில் ஒருவர் தெரிவித்தார். (91)

# சமுர்த்தி ஆலோசனைக் குழுக்களை கலைப்பதற்கு அமைச்சு தீர்மானம்


(ஆழியவளை)

கிராம அலுவலர் பிரிவுகள் தோறும் நிறுவப்பட்ட சமுர்த்தி ஆலோசனைக் குழுக்களை கலைப்பதற்கு சமுர்த்தி அமைச்சு தீர்மானித்துள்ளது.


உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இந்த ஆலோசனைக் குழுக்களை கலைப்பது என்ற தீர்மானம் அடங்கிய கடிதங்கள் சகல மாவட்ட மற்றும் பிரதேச செயலகங்களுக்கு சமுர்த்தி அமைச்சினால் அனுப்பிவைக்கப்பட்டது.


சமுர்த்தி வழங்க தகுதியுடையோரை புதிதாக தெரிவு செய்யும் முறை குறித்த விளக்கம் விரைவில் சமுர்த்தி அமைச்சால் அறிமுகப்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்காலத்தில் உணவு முத்திரைகளை வசதி குறைந்தோருக்கு வழங்கும் பொருட்டு விண்ணப்பங்கள் பரிசீலனை செய்வதற்கு கிராம அலுவலர் பிரிவுதோறும் நிறுவப்பட்ட சமுர்த்தி ஆலோசனைக் குழுக்களே தற்போது கலைக்கப்படவுள்ளன. (122)



# கணினித்தமிழ் முத்தமிழின் நான்காவது பரிமாணம்





**முத்தமிழின் நான்காவது பரிமாணமாக துணிவுடன் தற்போது கணினித்தமிழையும் இணைக்கலாம் என்று அறிஞர்கள் கருத்துச்சொலகிறார்கள். 2004 ஆம் நடக்கவுள்ள தமிழர் ஆராட்சி மாநாட்டில் அல்லது சர்வதேச தமிழ் அறிஞர்களின் சந்திப்பொன்றில், இந்த நான்காவது தமிழ் அலகை இணைப்பது குறித்து அவசியம் விவாதிப்பார்கள் என்று நம்பலாம். இயல், இசை நாடகம் என்ற முத்தமிழின் சிறப்புக்களையும் தொன்மைகளையும் உலகெங்கும் எடுதது இயம்பிநின்றாலும் இந்த மூன்றும் எடுத்துக்கொள்ளும் கால அலகைவிட, இந்த நான்காவது தமிழ் பரிமாண கணினித்தமிழ், தமிழ் மொழியின் சிறப்புக்களை மின்னல் வேகத்தில் உலகெங்கும் பரப்பி நிற்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.**

பல நெடுங்கால பண்டைத் தமிழியலில் இடம்பெறுகின்ற இயல், இசை நாடகம் என்னும் முத்தமிழின் நான்காம் பரிமாணமாக கணினித் தமிழ் கருதப்படுகிறது.

கணினித் தமிழ் என்னும் மின்செயலித்தமழ், முத்தமிழின் புது இணைப்பாகி நாற்றமிழ் என்று இனி அழைக்கப்படவேண்டிய தேவையை அறிவுசார் தமிழ் உலகம் தற்போது ஆராய்ந்து முடிவு காணும் நிலையில் உள்ளது.

இனிய தமிழ்மொழி மக்களிடம் சென்றடைகின்ற ஊடகங்களாக இயல், இசை, நாடகம் எனபவற்றைப் பண்டைத் தமிழ் அறிஞர்கள் முன்மொழிந்தார்கள். இருந்தாலும், பின்னர் புதிதாகப் பிறந்த மின்செயலியை அப்போது அவர்கள் சேர்த்திருக்க வாய்பிருக்கவில்லை. ஆனால், தற்போதைய தமிழ் அறிஞர்கள் கணினி என்று அழைக்கப்படும் இந்த மின் செயலியை (**Computer**) நான்காவது மிக முக்கியமான பரிமாணமாக முன்மொழிந்துள்ளார்கள்.

உலகெங்கும் பரந்து வாழும் இனிய தமிழ் உலாவிகள் (**Viewers**) அனைவரும் வலைப் பக்கங்களை (**Web sites**) அவர்கள் விரும்பும் மொழிகளில் (தமிழ்மொழி உட்பட) தற்போது நேரடியாகப் பார்க்கவும், படிக்கவும் முடிகிறது. தமிழ் எழுத்துருக்களைத் தரவிறக்கம் (**Down load**) செய்து அவற்றைப்பயன்படுத்தியே தமிழ் வலைகளில் தமிழைத் தமிழாகப் படிக்க முடிந்தகாலம் தற்போது முற்றாக மாற்றப்பட்டு, தற்போது உலாவிகள் வலைப்பக்கங்களுக்குச் சென்றால், தமிழ் வலைகளிலுள்ள தமிழ் எழுத்துருக்களை(**Font**) எதுவித தரவிறக்கமுமின்றி தன்னிச்சையாகத் தமிழில் படிக்க முடிகின்றது.

பல வருடங்களாக இந்த கணினித் தமிழ் பாவனையில் இருந்தாலும் இயல், இசை நாடகம் போன்ற அடிப்படைத் தமிழ் இயலிகளின் ஒரு புது இணையாக மின்செயலியைக் கருத முடியாதிருந்ததற்கான அடிப்படைக் காரணம் இந்தத் தரை இறக்கம் செய்கின்ற பிரச்சினை தான்.

கணினியில் தமிழை நேரடியாகப் பார்க்க முடிவதில்லையே. அங்கே புதிய எழுத்துருவைப் பயன்படுத்தியே தமிழைப் படிக்க முடிகின்றது என்பதால் கணினித் தமிழை முத்தமிழின் நான்காம் வடிவமாகப் பார்ப்பதில் மிகுந்த கருத்து வேற்றுமை இருந்தது.

தற்போது யூனிகோட் முறையில் எதிர்கால உலகலாவிய தனித்தரத்திற்கான அமைப்பாக தானிறங்கி (**Dynamic**) எழுத்துருவில் தமிழ் மொழியும் இணைக்கப்பட்டுள்ளதால் எந்தவொரு தமிழ் வலைப்பக்கத்தைத் திறக்கும் போதும், எழுத்துரு பற்றிய சிரமம் எதுவுமின்றி தூய தமிழில் அனைத்தையும் படிக்கவும் மேலதிக அழுத்திகளை (**Buttons**) தமிழில் பார்க்கவும் செயற்படுத்தவும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

படிப்படியாக பல இணையத்தளங்கள் இத் தானிறங்கி தமிழ் எழுத்துரு முறையை நடைமுறைப்படுத்தி வருவதை பாவனையாளர்கள் அவதானிக்கலாம். ஏராளமான இணையத் தளங்கள் தற்போதும் பழைய எழுத்துருக்களைப் பாவித்து வந்தாலும், விரைவில் இத் தானிறங்கி டைனமிக் எழுத்துருவுக்குக் கடந்து செல்லவே பலவித முயற்சிகளை எடுத்துவருகிறார்கள்.

நிதிப் பிரச்சினை உட்பட இது குறித்து தொழில்நுட்ப அறிவு மற்றும் உரிய வழிகாட்டிகள் கிடைக்காதகாரணத்தால் நீண்டகாலமாகச் செயற்பட்டுவரும் பல தளங்கள், இத்தானிறங்கி எழுத்துருவுக்குக் கடந்து செல்லத் தாமதம் ஏற்பட்டாலும் ஒரு சில வருடங்களுக்குள் உலகளாவிய ஒரு தனித்தமிழ் எழுத்துரு கணினி உலகிற்குக்கனிந்து வந்துள்ளதை தரவுகளும், ஆய்வுகளும் உறுதி செய்கின்றன.

எதுவித செயலறிவு, பாவனைப்பயன், தொழிலறிவு அற்ற தமிழர்களும் கூட எவ்வித முன்னேற்பாடுகளையும் செய்து கொள்ளாமல் நீண்ட தரைவிறக்க இலத்திரனியல் சிரமங்களுக்குள் தங்களைச்சிக்கவைத்துக் கொள்ளாமல் ஆங்கில இணையத்தளங்களை ஆங்கிலத்தில் பார்ப்பதுபோன்று, தமிழ இணையத் தளங்களையும் தமிழில் நேரடியாகப் பார்கக வகைசெய்வதே இந்த செயலியின் நோக்கம்.

நீண்டகாலமாக தமிழ் அறிஞர்கள் பலர் இதற்கான சர்வதேச தேவையை அழுத்தமாகச் சொல்லிவந்தாலும், பூனைக்கு மணி கட்டுவது யார் என்கின்ற ஒரு காரணத்துடன் இதற்கென ஓர் அறிஞர் குழுவை உருவாக்கி செயற்படுத்துவதில் உருவாகும் நிதிச் செலவை யார்பெறுப்பது என்பதில் நீண்டகால இழுபறி இருந்துவந்தது.

சர்வதேசத் தமிழ் அறிஞர்கள் மற்றும் தமிழ் கணினி வல்லுனர்கள் தொடர்ச்சியாகக் கொடுத்து வந்த அழுத்தத்தினாலும் இதன்தேவை கருதிய புரிதலினாலும் இறுதியில் தமிழ்நாடு மாநில அரசு இதற்கான ஒரு உயர்மட்ட செயற்குழுவை உருவாக்கி அதற்கென ஓர்நிதி ஒதுக்கீட்டையும் செய்தது.

இந்தக் குழு பல வித ஆய்வுகளையும் மேற்கொண்டு (**Tsc**) எனப்படும் பொது எழுத்துருவை உருவாக்கி அவற்றை அனைத்து சர்வதேச தமிழ் இணையத்தளத்தினரும் பயன்படுத்த வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர். இதன் காரணமாக பல வலைப்பங்களகள் இந்த எழுத்துருக்களைப் பாவிக்க ஆரம்பித்தன. அத்தோடு உண்மைத்தர எழுத்துருக்களை (**TTf fonts or true type fonts**) மட்டுமே பாவிக்கும்படியும் பொது வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

இருந்தாலும் அடிப்படைப்பிரச்சினை தீர்ந்தபாடாக இல்லை எந்தவொரு எழுத்துருவையும் தரவிறக்கம்செய்யாமல் நேரடியாகத் தமிழில் இணையத் தளத்தை மேய்வதென்னவோ முயற்கொம்பாகவே இருந்து வந்தது. முரசு ,அஞ்சல் உட்பட உண்மைத்தர (**TTF**) எழுத்துருக்களும், மயிலை, இணைமதி, மயிலைசிற, ரிஎஸ்சீ என்னும் எழுத்துருக்களும், இன்னும் பல இடைக்கால முயற்சிகளும், கண்டுபிடிப்புக்களும் பலனளிததாலும், எது வித மேலதி எழுத்துருவை அல்லது செயலியை தரவிறக்கம் செய்யாமல், தமிழை வலையில் பார்பது என்பது முடியாத விடயமாகவே தென்பட்டது.

பலவித சர்வதேச நிபுணர்களின் ஆழமான ஆய்வுகள் தொடர்ந்தன. சர்வதேச தமிழ் அறிஞர்களும், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் உட்பட பல சர்வதேச நாடுகளின் அறிஞர்கள் பலரும் ஒன்றிணைந்து, தனிக்குழுக்களாகவும் இது குறித்து விவாதித்து ஆராய்சசியில் ஈடுபட்டார்கள். எழுத்துச்சீர்மை குறித்த தமிழ்ஆராய்ச்சி ஈமெயில் கலந்துரையாடல்கள், சர்வதேச அறிஞர்களிடையே தொடர்ச்சியாக இடம் பெற்றதுடன், விரிவுரையாளரகள், தொழிநுட்பவியலாளர்கள், அறிஞர்கள், பாவனையாளர்கள், பாமரர்கள் என்று பல தரப்படடவர்களின் கருத்துக்களும் சேகரிக்கப்பட்டு, எழுத்துச் சீரமை ஆராய்ச்சி வேகமாகத தொடர்ந்தது.

இந்த ஆராய்ச்சியின் போது, தொல்காப்பியர் காலத்திலும், திருவள்ளுவர் காலத்திலும் இருந்த விஞ்ஞானத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டதும் சரியானதுமான பாரம்பரிய தமிழ்எழுத்துத் தத்துவங்களை திரும்பவும் நடைமுறைப்படுத்துவதெனத் தீர்மானிக்கப் பட்டது.

பின்னர் பாவனைக்கு வந்த குதர்க்கம் நிறைந்த சில தமிழ் எழுத்துக்கள், மாணவர்களையும், கல்வி வாய்ப்பு குறைந்தேரையும் பெரியளவில் இடர்படுத்தி, தமிழ் வளர்ச்சிக்கு தடை போடுவதாகக் கருதப்பட்டது. ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு போன்ற குதர்க்கமான குறியீடுகள் அண்மைக்காலத்தில் தவறாக அறிமுகமாகி, தேவைக்கதிகமாகப் பாவனையிலுள்ள குறியீடுகள் என்றும், அவை தவிர தவறாக அறிமுகமாகி தற்போது பாவனையிலுள்ள உகர, ஊகார, உயிர்மெய் எழுத்துக்கள் (கு,கூ,சு,சூ,லு,லூ,டு,டூ....) எழுத வாசிக்கத் தெரியாதேர் மற்றும் பகுதிநேரமாக தமிழ் பயில்வோரை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்குவது உணரப்பட்டு, பரவலாக இந்தச் சிக்கலைத்தீர்க்க இணக்கப்பாடு காணப்பட்டது.

இதேவேளை, எழுந்த ஓர் பிரதான கேள்வியே "கணினிக்காகத் தமிழா, அல்லது தமிழுக்காக கணினியா" என்பது இந்தத் தமிழ் சீர்திருத்தம் கணினிக்காக அல்ல என்பதை அறிஞர்கள் உறுதி செய்தார்கள். கணினியின் இலத்திரன் (**Electronic**) செயற்பாட்டுக்கு, தர்க்கரீதியான மொழியாண்மையுடன் ஒரு மொழி செயற்பட வேண்டும என்பது அவசியமாக இருந்தாலும், இத்தகைய தர்க்க ரீதியான மையப்பாடு எந்த மொழிக்கும் இருபபது அவசியம் என்பதை அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள். இதற்குச் சான்றாக பல சிக்கல்கள் நிறைந்த சீன மொழி முற்றுமுழுதாக தர்க்கரீதியாகச் செயற்படுவதை உதாரணம் காட்டியதோடு, தமிழ் மொழியில் காணப்படும் குதர்க்கரீதியான தொழிற்பாடு களையப்பட வேண்டிய தேவையும் உணரப்பட்டது.

1935 ஆம் ஆண்டு இராமசாமிப் பெரியார் முன்மொழிந்த தமிழ் எழுத்துச் சீர்மை தொடர்பான காரணிகளும், கோட்பாடுகளுமே தற்போது நடைமுறைப்படுத்தப்படுவதையும், னை, ணை, ளை,லை,னா,ணா,றா, போன்ற ஐகார உயிர் மெய், ஆகாரஉயிர்மெய் போன்றவற்றை மாற்ற வேண்டிய தேவை குறித்தும் தர்க்கரீதியாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்தார்கள் தமிழ் கூறுநல்லறிஞர்கள்.

இத்தகைய நீண்டகால ஆய்வின் மூலம், தானிறங்கி எழுத்துரு (**Dynamic Font**) முறையில், ஓர் உலகலாவிய தனித்தரமான எழுத்துருவை உருவாக்கி, அனைத்து வலைப்பக்கங்களுக்கும் இவ் எழுத்துருவையே பயன்படுத்தக் கூடிய வாய்ப்பு இருப்பது கண்டறியப்பட்டது. இதன் அடிப்படையில் பல வித ஆராச்சிகளையும் செய்து இறுதியில் யூனிகோட் (**Unicode**) என்றழைக்கப்படும் இலத்திரன் முறையில் தமிழை மொழியாக்கம செய்து, இயங்கு தளங்களில் உள்ளடக்கம்செய்யப்படுவதனால், மேலதிக தரவிறக்கம் அல்லது வேறு எது வித முன் தேவைகளின்றி, வலைப்பக்கங்கள் தமிழில் தாணாகவே திறக்க வாய்ப்புக் கிட்டியது. இதே தருணத்தில், அண்மைக்காலத்தில் தவறாக அறிமுகமான, தமிழ் எழுத்து குறியீடுகளான ஒற்றைக்கொம்பு, இரட்ை க்கொம்பு, பின் - ஐக் குறியீடு, பின் - ஔ குறியீடு போன்றனவும் உகர,ஊகார மெய எழுத்துக்களும் இந்த யூனிகோட் என்னும் தகுதரத்தின் அடிப்படை வரையறுப்பில் நீக்கப்பட்டு, தமிழ் மொழியாண்மையின் தர்க்கரீதியான கோட்பாடுகள் (**Logical Structures**) சீர் செய்யப்பட்டது.

உலகில் பாவிக்கப்பட்டு வரும் எல்லா மொழிகளையும் கணினியின் இயல்பாகப் பாவிக்க வகை செய்யும் யூனிகோட் என்னும் உலகலாவிய தகுதரம் இன்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த உலகலாவிய யூனிகோட் தகுதரத்தின் அடிப்படைக் கோட்பாடும், தொல்காப்பியம் என்னும் பழமைவாய்ந்த தமிழ் இலக்கணக் கோட்பாடும் விஞ்ஞான ரீதியிலும், தர்க்கரீதியிலும் ஒன்றுபட்டவை என்பதை மொழி ஆராய்ச்சி ஆசிரியர் ஆவரங்கால் சின்னத்துரை, சிறீவாஸ, தமிழ் மொழி ஆராய்ச்சியாளர் சுரதா போன்றோர் உட்பட பல தமிழ் அறிஞர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

இதன் அடிப்படையில், இந்த யூனிகோட் தகுதரத்தில் தமிழையும் கணினி அமைப்பில் இயல்பாக இணைகக்கும் முயற்சியுடன், எழுத்துச்சீர்மையும் இணைத்துச் செயற்படுத்தப்பட்டதனால், யூனிகோட் என்னும் தகுதரத்தின் அடிப்படை வரையறுப்பில் குதர்க்கரீதியான தமிழ் எழுத்துக்கள் கழையப்பட்டு, நாளடைவில் தொல்காப்பிய இலகு இலக்கண மொழிமுறை மீண்டும் நடைமுறைகக்கு வருவதற்கான வசதி உள்வாங்கப் பட்டது. மைக்ரோசொப்.்.ற் நிறுவனம் தயாரித்து வழங்கும் வின்டோஸ் என்னும் கணினி தொழிலியக்கியின் பலநிரலிகளிலும், செயலிகளிலும் தமிழ் மொழியைப் பயன்படுத்த முடியாமை ஒரு பெரும் குறையாக இருந்ததாலேயே, ஈ கலப்பை (**e-kalapai**) உட்பட ரிஎஸ்சி (**TSC**) என அழைக்கப்பட்ட எழுத்துருக்களும்,(**TTF**) என அழைக்கப்பட்ட எழுத்துருக்களும் தரவிறக்கம் செய்து பாவிக்கப்பட்டாலும், தரவிறக்கமின்றி, ஏனைய மொழிகள் போல் தானிறங்கி முறையில தமிழ்மொழியும் பாவனைக்கு வரவேண்மென்ற நோக்கோடு பன்னாட்டு அறிஞர்கள் கடுமையாக உழைததத்தினால் கிடைத்த பரிசே இந்த யூனிகோட முறையிலான தானிறங்கி, அல்லது கொண்டோடி (**Dynamic**) எழுத்துரு.

இத்தகைய மிகப்பெரிய கண்டுபிடிப் பின் மூலம், நீண்டகாலமாக தமிழ்க்கூறு நல்லுலகில், கணினிப் பாவனையிலிருந்து வந்த எழுத்துரு குறித்த தொழிநுட்பப் பிரச்சினைக்கு ஓர் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

இணையத்தில் கருத்துக் களங்கள், தமிழ் சொல்லாடல்கள், தமிழ் அரங்குகள் உரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் அனைத்தும் ஆர்வமுள்ள அனைத்துத் தமிழர்களாலும் தமிழிலேயே நடத்துவதற்கு இந்தத் தானிறங்கி செயலி இலகுவாக வழிவகுத்துக் கொடுத்தது. கணினியின் பெரும்பான்மை உள்ளீட்டு சாதனங்களில் தமிழை இலாவகமாகப் பயன்படுத்த யூனிகோட் முறை வழிகோலியது. குறிப்பேடு (**Notepad**), சொற்செயலி (**word processor**), தரவுத்தளம் (**Datebase**), விரித்தாள் (**Spreadsheet**), தூதுபோகு செயலிகள் (**Messenger**), திருப்பாளர் (**html editor**) வலைப்பக்க




வழங்கிகள், மெய்நிகர் (**Chat line**), தரவுக் கடத்திகள் ( **Protocol**), மின்னஞ்சல் (**E.Mail**), ஒருங்கிணை எழுதி இன்னும் இன்னோரன்ன கணினியின் செயலிகளை, நிரலிகளையும் இத்தானிறங்கி எழுத்துரு (கொண்டோடி எழுத்துரு) மூலம் தமிழில் பார்க்கப்படிக்க பயன் படுத்த வழிபிறந்தது.

தற்கால மின்செயலியின் தேடு தளங்களிலும், தமிழ் தளங்களில் தேடி, விரும்பும் தளங்களைத் திறந்தால் இயற்கையாக தமிழில் திறந்து தமிழில் படிக்க வழிசெய்கின்றது.

வாங்கி - வழங்கி (**Client server**) மூலமாக நாம் கொடுக்கும் இணையத்தள முகவரியை வாங்கி, மீண்டும் வழங்கும்போது, தமிழ் எழுத்துவரு வழங்கியில் இல்லாத காரணத்தால் இத்தகவல் பரிமாற்றம் கடந்த காலத்தில் இயல்பாகத் தமிழில் திறக்க வாய்ப்பிருக்கவில்லை.

இப்போது, இத்தானிறங்கி அல்லது கொண்டோடி எழுத்துரு மூலம் வாங்கி எம்மிடமிருந்து பெறும் இணையத்தளத்தை பரிசீலித்து, அதிலே பாவிக்கப்பட்டுள்ள எழுத்துருவை **E.O.T** என்று அழைக்கப்படும். யூனிகோட் வகைக்கு எழுத்தை உருக்கி (மாற்றி) வழங்கிக்கு வழங்கும் போது, எமது கணினியில் நாம் தமிழை, எதுவித தரவிறக்கமுமினறி இயல்பாகப் பார்க்க முடிகிறது. தரவுகளின் கடத்தல் வடிவங்கள் புதிய பூனிக்கோட் முறையிலான எழுத்து உருக்கிமூலம் தகுதரத்திற்கு மாற்றமடைந்து. எவரும் எந்தக் கணினியிலும், எவ்வேளையிலும் தமிழை தமிழாகவே படிக்க பயன்படுகிறது.

முத்தமிழின் நான்காவது பரிமாணமாக துணிவுடன் தற்போது கணினித் தமிழையும் இணைக்கலாம் என்று அறிஞர்கள் கருத்து சொலகிறார்கள். 2004 ஆம் நடக்கவுள்ள தமிழர் ஆராட்சி மாநாட்டில் அல்லது சர்வதேச தமிழ் அறிஞர்களின் சந்திப்பொன்றில், இந்த நான்காவது தமிழ் அலகை இணைப்பது குறித்து அவசியம் விவாதிப்பார்கள் என்று நம்பலாம். இயல், இசை நாடகம் என்ற முத்தமிழின் சிறப்புக்களையும் தொன்மைகளையும் உலகெங்கும் எடுத்து இயம்பி நின்றாலும் என்ற முத்தமிழும் தமிழின் சிறப்புக்களையும், தொன்மைகளையும் உலகெங்கும் எடுதியமபிநின்றாலும் இந்த மூன்றும் எடுத்துக் கொள்ளும் கால அலகைவிட, இந்த நான்காவது தமிழ் பரிமாண கணினித் தமிழ், தமிழ் மொழியின் சிறப்புக்களை மின்னல் வேகத்தில் உலகெங்கும் பரப்பி நிற்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

ஆசியாவின் மூன்றாம் உலக நாடொன்றின் குக்கிராமத்தில் வறிய விவசாயி படைத்த ஒரு கைக்கூ கவிதையை, வடஅமெரிக்க முதலாம் உலக நாடென்றின் விஞ்ஞான ஆய்வு கூடத்தில் பணியாற்றும் தமிழ் விஞ்ஞானி, மறு நிமிடமே படித்துவிடக் கூடிய வாய்ப்பை மிக நுண்ணியமாக வழங்கிவரும் இந்தக் கணினித் தமிழ் அவசியம் நான்காவது பரிமாணமாக இணைந்து கொள்ளும் என்பதில் ஐயம் எழ வாய்ப்பில்லை. அதனால், இந்த உத்தியோக பூர்வமான நாற்றமிழ் அறிவிப்பு விரைவில் வரும் என்று நம்புவோம் அது வரை காத்திராமல எமது கணித் தமிழ் அறிவையும் வேகமாக உயர்த்திட முயன்றிடுவோம்.

*நன்றி:-* **தமிழர் தகவல்**

# நடேசனின் ஒவ்வொரு எழுத்துக்களும் சுயநிர்ணய உரிமையை உணர்த்தின!

## நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன்

**மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஐயாத்துரை நடேசனின் ஒவ்வொரு எழுத்துக்களும் தமிழருக்கு சுயநிர்ணய உரிமை வேண்டும் என்பதை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தன.**

**இவ்வாறு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் கருத்துத்தெரிவித்தார்.**

**மூத்த பத்திரிகையாளர் நடேசனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.**

அவர் மேலும் தொடர்ந்து கூறியதாவது -

ஊடகவியலாளர் - நாட்டுப்பற்றாளர் நடேசனின் பணியால் இந்த உலகம் முழுவதுமே தமிழருக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தெரியப்படுத்தப்பட்டன.

நடேசனின் எழுத்துக்கள் யாவும் தமிழருக்கு சுயநிர்ணயம் வேண்டும் என்பதையேவலியுறுத்தி இருந்தன.

அவரது கனவுகள் எல்லாம் இந்த தமிழ் மண்ணில் சுதந்திரமான வாழ்வு அனைத்தும் தமிழ்மக்களுக்கு கிடைக்கவேண்டும் என்பதே அது நிறைவேறும் நாள் நெருங்கி வருவதாக காண்கின்றோம்.

ஊடகவியலாளர்கள் என்றும் துணிவுடன் தமது கருத்துக்களை நடேசன் போல் வெளிப்படுத்தி நியாயவாதிகளாக வாழவேண்டும் என்றார்.




### சி.இளம்பரிதி

யாழ்.மாவட்ட அரசியற்துறை பொறுப்பாளர்

நடேசனின் படுகொலை தமிழ்த்தேசிய ஆத்மாவைத் தட்டி எழுப்பியுள்ளது. இனியும் இத்தகைய கொலைகள் தொடர்வதை தமிழர்கள் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள் எனத் தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் ஐயாத்துரை நடேசனின் அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

தமிழ்த்தேசியத்தை அழிக்க நினைக்கும் சிங்களப் பேரினவாதிகளினதும், சிங்கள அரசின் அடிவருடிகளினதும் செயற்பாட்டின் ஓர் வடிவமே இந்த நடேசனின் கொலையாகும். எமது இனத்தின் பல்வேறு சிரமங்களை உலகறியச் செய்வதிலும், உண்மைகளை வெளிப்படுத்துவதிலும் அதிகம் பங்காற்றி வருபவர்கள் ஊடகவியலாளர்கள்.

அவர்களின் குரலை நசுக்குவதன் மூலமும் துணிச்சலுள்ள பத்திரிகையாளர்களை அடிபணியச் செய்வதன் மூலமும் சிங்கள அரசும், அதன் அடிவருடிகளும் தாம் எண்ணியதைச் செய்துவிடலாம் எனக் கருதுகின்றனர்.

தமிழ்த்தேசியம் வலுப்பெற சேவை புரிந்தவர்கள் ஊடகவியலாளர்கள். அந்த வகையில் பணியாற்றிய சாதனையாளன் நடேசன் ஆவார். தமிழ்த் தேசியத்தை மக்கள் மத்தியில் ஊட்டியதனாலேயே இவர் அழிக்கப்பட்டார்.

உண்மையை, உறுதியுடன் தெளிவாக உணர்த்திய பத்திரிகையாளன் இன்று கொலை செய்யப்பட்டிருக்கின்றான் என்றால், இந்த நாட்டில் ஊடகவியலாளர்களுக்குரிய பாதுகாப்பை கேள்விக்கிடமாக்கியுள்ளது.

ஊடகத்துறைக்கு உயிர்ப்பூட்டிய இவரைக் கொலை செய்தமையானது, உறங்கிக்கிடந்த தமிழ்த் தேசிய உணர்வினையும், தேசிய சக்தியையும் தட்டி எழுப்பியுள்ளது.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெற்றிருக்கும் இந்தக் கொலையானது ஜனநாயகத்திற்கான சாவுமணி மட்டுமல்ல, சமாதான முயற்சிக்கான சாவுமணியும் கூட.

உண்மையான தகவல்களை வழங்கி, மக்களுக்கு நல்ல கருத்துக்களைக் கூறும் ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

நடேசனின் இழப்பை தமிழ்த்தேசியத்திற்கான இழப்பாகவே கருதுகின்றோம். அதேவேளையில்- உண்மையான ஊடகவியலாளர்களின் இழப்பு முழு உலகத்திற்குமான இழப்பென்பதை எவரும் மறுக்க முடியாது.

தமிழ்த்தேசிய ஆன்மாவைத் தட்டி எழுப்பி அதனை உயர்த்தும் வகையில் இவரது எழுத்துக்கள் செல்வாக்குப் பெற்றிருந்ததை உணர்த்தும்வகையில், யாழ்.குடா நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும் வந்து அஞ்சலி செலுத்திய ஏராளமான மக்களைக் கொண்டு உணர்ந்து கொள்ள முடிகிறது.

இந்தப்படுகொலை எதைக்காட்டுகிறதென்றால், தமிழ்மக்கள் தம்மைத்தாமே ஆளும்நிலை உருவாகும்போதுதான் தமிழ் ஊடகவியலாளர்களினதும் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### சிவாஜிலிங்கம்

(தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி)

தமிழ்த் தேசியத்திற்காக குரல் கொடுத்தவர்களில் முக்கியமானவராக அமரர் ஐ.நடேசன் விளங்குகின்றார்.

நடேசன் போன்ற மூத்த பத்திரிகையாளர்களின் முயற்சியாலேயே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுபட்ட தமிழ்க்கட்சி ஒன்று உருவாகியது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

யாழ்ப்பாண அபிவிருத்தி, வடமராட்சியின் அபிவிருத்தி , தமிழ்ப் பிரதேச அபிவிருத்தி எனப்பல பணிகள் தொடர்பாக எமக்கு ஆலோசனைகள் தந்து உதவியவர். சிறந்த மதிநுட்பம் மிக்கவர். அப்படியான ஒரு ஊடகவியலாளனை இழந்திருக்கின்றோம்.

இத்தகைய கொலைகளைத் தடுக்க அனைத்து ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து பாரியதொரு ஆர்ப்பாட்டப் பேரணியை நாடாளுமன்றம் நோக்கியோ அல்லது ஜனாதிபதி மாளிகை நோக்கியோ நடத்த வேண்டும்.

சர்வதேச ரீதியில் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்த வேண்டும். அப்போதுதான் ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பாக அரசு அக்கறை செலுத்த முனையும் என்றார்.

### கனகரவி

(வவுனியா ஊடகவியலாளர்)

பணியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டவர் நடேசன். இவர் உண்மைகளை வெளிப்படுத்தியதனால் அரசின் எதிர்ப்பைச் சந்தித்தவர்.

குடும்ப சுகத்தையும் பொருட்படுத்தாமல் ஊடகத்துறைமூலம் தமிழ் சமூகத்திற்காக உழைத்தவர். அவரின் இழப்பால் உலக தமிழ் மக்கள் அனைவருமே சோகத்தில் மூழ்கியுள்ளனர் எனத் தெரிவித்தார்.



### கெனடி

(கிழக்குப் பல்கலை.விரிவுரையாளர் )

சிறந்த ஊடகவியலாளனை தேச விரோதிகள் சுட்டுக்கொன்று தமது வெறியாட்டத்தினை மேற்கொண்டுள்ளனர். இதன் மூலம் அவர்கள் தமது இனத்திற்கும், தமக்கும் இழைத்திருக்கும் துரோகத்தினை எண்ணிப்பார்க்க மறந்துவிட்டனர்.

சுதந்திர ஊடகச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த முடியும் என நினைக்கின்றனர். இது சாத்தியமற்ற பொருத்தமற்ற சிந்தனை.

இந்தப் பாதககர்ளின் எண்ணம் விரைவில் அழியும் கருணாவின் குழு புரியும் அடாவடிகள் நீடிக்கப் போவதில்லை.

கரி பூசிய முகத்தைத் வைத்துக் கொண்டு கருணா அடாவடி புரிகிறார். அது நீடித்திருக்கும் ஒன்றல்ல என்பது சில நாட்களில் தெரியும் என அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தார்.

### இரா.துரைரட்ணம்

(தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் )

நடேசனைக் கொலை செய்தவர்களின் நோக்கம் ஒன்றாகத்தான் இருக்க முடியும். அவரது நியாயத்திற்கான செயலை நிறுத்துவது என்பதாகும். இன்றைய தினத்தில் ஊடகவியலாளர்கள் உறுதியெடுத்துக் கொண்டு எழுது கோல்களை உரப்படுத்த வேண்டும்.

அநியாயத்திற்கு எதிராக குரல் கொடுத்து உண்மைக்காக உழைக்க மனதில் உறுதி எடுத்துக்கொள்ள வேண்டும்.

### தவச்செல்வம்

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர்

ஐ.பி.ஸி தனது பணிகளில் முதலாவதாக நிமலராஜனை இழந்தது. தற்போது நடேசனை இழந்திருக்கிறது. இத்தகைய இழப்புக்களை ஊடகத்துறை மட்டுமல்ல மக்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும் இல்லையேல் உண்மைகள் மறைக்கப்பட்டு பேரினவாதிகளின் அராஜகம் மேலோங்கும்.

எமது பாதுகாப்பிற்கு ஒரேவழி எம்மை நாமே ஆழும் இடைக்கால நிர்வாகசபையைத் தமிழர்களாகிய எம்மிடமே ஒப்படைக்க அரசு முன்வர வேண்டும் அதற்கான காலமும் கனிந்துவிட்டது என்றார்.


யாழ்ப்பாணத்தில் புதியதொரு முயற்சி!!

A/L முடித்துவிட்டு இருக்கும் மாணவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்...............

குறுகிய காலத்தில் உங்கள் எதிர்காலம் வளம்பெற...!

**நேரடி ஒலிபரப்பாளர் பயிற்சிநெறி!**

**ஊடகவியலாளர் பயிற்சிநெறி!**

என்றும் புதுமையை வழங்கும் ஜோ.எகட்டன் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தும் பயிற்சி நெறி!

- கொழும்பில் இருந்து வருகைதரும் விரிவுரையாளர்கள்
- மிகப் பிரபல்யமான ஒலிபரப்பாளர்கள் பயிற்சிகளை வழங்குவார்கள்.

ஆரம்பம் ஜூன் நடுப்பகுதி

பயிற்சிக்கான முழுக்கட்டணம் ரூபா 5000/- மட்டும்

பதிவுக்கட்டணம் ரூபா 1000/=

**பயிற்சிக்காலம் 6 மாதங்கள்**

▼ தமிழ்மொழியில் திறமைச்சித்தி, ஆங்கிலத்தில் சாதாரண சித்தியுடன் க.பொ.த.சாதாரணதரம் சித்தியடைந்தவர்கள் விண்ணப்பிக்கலாம்.

▼ எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னதாக விண்ணப்பிக்கவும்.

பதிவுக்கட்டணம் ரூபா 1000/= இற்கான காசுக்கட்டளையை 'Zenith Marketing and Advertising Systems' என்ற பெயரில் சுண்டுக்குளி தபாலகத்தில் மாற்றக்கூடியதாக விண்ணப்பத்துடன் அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி: செனித் மாக்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் மகளிர் கல்லூரி முன் ஒழுங்கை, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு: தொ.பே.இல: 222 - 7227

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

குறிப்பு: தலைமையகத்தில் இருந்து வந்த இறுதியான அறிவித்தல்படி ஆங்கில கல்வி நீக்கப்பட்டுள்ளது.

(சி-2635)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மூதூர் - பாட்டாளிபுரத்தில் திலீபன் மருத்துவமனை திறப்பு

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசமான மூதூர் - பாட்டாளிபுரத்தில் தியாகதீபம் திலீபன் மருத்துவமனை நேற்று திறந்துவைக்கப்பட்டது.

திருமலை மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் காருண்யா தலைமையில் இடம்பெற்ற இந்தத் திறப்புவிழாவில் வைத்தியசாலையின் பெயர்ப்பலகையை விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் சொர்ணம் திறந்துவைத்தார்.

வைத்தியசாலை மண்டபத்தினை குட்டிசிறி மோட்டார் படையணி சிறப்புத்தளபதி கேணல் பானு திறந்துவைக்க திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் சிறப்புரையாற்றினார்.

புதிதாகத் திறந்துவைக்கப்பட்டுள்ள இந்த வைத்தியசாலையின் பொறுப்பாளராக போராளி வைத்தியா வேணியன் கடமையேற்றுள்ளார்.

இந்த திறப்புவிழாவில் மாணவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என பெருந்தொகையானோர் கலந்துகொண்டனர்.

7500 ற்கு மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற இப்பிரதேசத்தில் 15 கிலோ மீற்றர் தூரத்தினைக் கடந்து மூதூர் நகரப்பகுதிக்குச் சென்றே தமது மருத்துவத் தேவைகளை பூர்த்தி செய்து வந்தனர்.

இந்த நிலையில், தியாகதீபம் திலீபன் மருத்துவமனை இப்பிரதேசத்தில் அமைக்கப்பட்டமை இப்பிரதேச மக்களைப் பொறுத்தவரையில் வரப்பிரசாதமாகவே அமைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (04,10)

## அரசியல் சக்திகளும் தீய சிந்தனையாளர்களும்

# அறிவற்ற தனமாகச் சிந்திப்பதன் வெளிப்பாடே நடேசனின் படுகொலை

## சிங்கள ஊடகவியலாளர் சுனந்த தேசப்பிரிய

சில அரசியல் சக்திகளும், சில தீய சிந்தனையாளர்களும் அறிவற்ற தனமாகச் சிந்திக்கின்றதன் வெளிப்பாடே ஊடகவியலாளர் நடேசனின் படுகொலையாகும். ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்வதன் மூலம் ஊடகங்களைக் கட்டுப்படுத்திவிட முடியும் என்று இவர்கள் நினைக்கின்றார்கள். அது மிகவும் தவறானதாகும் என, பிரபல சிங்கள ஊடகவியலாளரான சுனந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர், நாட்டுப்பற்றாளர் நடேசனின் இறுதி அஞ்சலி நிகழ்வில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் -

ஊடகவியலாளர்களுக்கு மிகவும் முக்கியமான துக்கமான நாளாக நடேசனின் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

ஊடகவியலாளர் மத்தியில் மத, மொழி, வேறுபாடில்லை. அமரர் நடேசன் எல்லாப் பத்திரிகையாளர்களுடனும் சிறப்பாக அணுகி தமது அன்பான பேச்சால் அனைவரையும் கவரும் தன்மை கொண்டவர். சிறந்த அறிவாற்றல் மிக்கவர்.

ஊடகவியலாளனைக் கொலை செய்வதனூடாக ஊடகங்களைக் கட்டுப்படுத்திவிட முடியும் என எண்ணுவது மிகவும் தவறானது. இத்தகைய செயல்கள் ஊடகவியலாளர்களை மேலும் எழுதத் தூண்டும். பல ஊடகவியலாளர்களை உருவாக்கும் என்பதை அவர்கள் உணரமறுக்கிறார்கள்.

சகோதரன் நிமலராஜனின் படுகொலை 2000 ஆம் ஆண்டுத் தேர்தலின் பின்னர் நிகழ்ந்தது. அதேபோல் தற்போது ஓர் தேர்தல் முடிந்த பின்னர் ஓர் உன்னத ஊடகவியலாளன் கொலை செய்யப்பட்டிருக்கின்றான்.

இந்தக் கொலைகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என நாம் நம்ப முடியாத துர்ப்பாக்கிய நிலை ஒன்று உருவாகி வருகின்றது.

ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக இயங்க வழி செய்யுங்கள். பொது மக்களுக்காக வாழும் ஊடகவியலாளர்களைக் கொலை செய்வதையோ, அச்சுறுத்துவதையோ, ஆயுதக்குழுக்களும் அரசியலாளர்களும் நிறுத்த வேண்டும். இதனை அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

ஊடகவியலாளர்கள் இத்தகைய கொலைகளைக் கண்டு சோர்வடையாது தமது பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும் என்றார்.

# மட்டக்களப்பில் நேற்றும் படையினர்-புலிகள் சந்திப்பு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்டுவரும் படுகொலைகளைத் தடுத்து நிறுத்தி சூத்திரதாரிகளைக் கண்டறிந்து நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பாக இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையில் நேற்றுச் சந்திப்பொன்று இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள போர்நிறுத்தக் கண்காணிப்பு அலுவலகத்தில் நேற்று மாலை 3 மணி தொடக்கம் 4.30 மணிவரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதில் விடுதலைப் புலிகள் தரப்பில மட்டக்களப்பு நகர அரசியற்துறைப் பொறுப்பாளர் சேனாதிராசா தலைமையில் பட்டிருப்புக் கோட்ட பொறுப்பாளர் செல்வன் மற்றும் மனோஜ் ஆகிய மூவரும் கலந்துகொண்டனர்.

படைத்தரப்பில் 23 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி கேணல் அமரதுங்க, மேஜர் சமந்த, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கீரவெல்ல, மட்டக்களப்பு நகரப் பொலிஸ் பொறுப்பதிகாரி பண்டார ஆகியோர் கலந்துகொண்டனர்.

கண்காணிப்புக் குழு தரப்பில் மாவட்ட பிரதித் தலைவர் பேர்வான் நஸ்முசன், ரூபார் ஹெரால்வ் ஆகியோரும் பங்கேற்றனர்.

மட்டக்களப்பில் தற்போது இடம்பெற்று வரும் படுகொலைகளுக்கு பின்னணியில் படையினரும் பொலிஸாரும் இருப்பதாக தாம் சந்தேகிப்பதாக நேற்றைய சந்திப்பில் புலிகள் தெரிவித்தனர்.

இதற்குப் படையினர் தரப்பில் தற்போது மட்டக்களப்பில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சந்தேகத்திற்கிடமான முறையில் யாராவது ஆயுதங்களுடன் நடமாடினால் படையினருக்கு அறிவிக்கும்படியும் கோரப்பட்டது.

அத்துடன் படையினர் சமாதானத்தில் நம்பிக்கை வைத்துள்ளன்ரெனவும் அதனை அவர்கள் குழப்பவில்லை எனவும் படையினர் தெரிவித்தனர்.

இவ்வாறான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இரு பகுதியினரும் அடிக்கடி சந்தித்து கலந்துரையாடி சுமுக நிலையை ஏற்படுத்த வேண்டுமெனவும் படையினர் கேட்டுக்கொணடனர்.

நேற்றுமுன்தினம் வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் கேணல் ரமேஸ் - மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொடவிற்கு இடையே இடம்பெற்ற சந்திப்பின் தொடர்ச்சியே நேற்றைய சந்திப்பென்பதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பில்

# இராணுவ கட்டுப்பாட்டு பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது!

மட்டக்களப்பில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்றுவரும் படுகொலைச் சம்பவங்களைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இராணுவத்தினரின் உதவியுடன் பொலிஸார் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிற மாவட்டங்களில் இருந்து மட்டக்களப்பிற்குள் உட்புகும் வாகனங்கள் தீவிர சோதனைக்குட்படுத்தப்பட்டு வருகின்றன.

அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினருடன் விசேட அதிரடிப்படையினரும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு பொலிஸ் தலைமையகத்திற்கு உட்பட்ட பிரதேசங்களில் பொலிஸார் 15 இற்கும் மேற்பட்ட சோதனைச் சாவடிகளை அமைத்துள்ளனர்.

## பல்லாயிரக்கணக்கானோர்...

இந்த நிகழ்வின் ஆரம்பமாக நடேசனின் பாரியார் கௌரி நடேசன் ஈகச்சுடரை ஏற்றிவைத்தார். பின்னர் நடேசனின் பிள்ளைகள் புகழுடலுக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் மலர் மாலை அணிவித்தனர். அடுத்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றன.

இலங்கை தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத் தலைவர் இரா.துரைரட்ணம், செயலாளர் சன்.தவராஜா, வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்க உறுப்பினர் தயாபரன், மாணவர் பேரவையைச் சேர்ந்த சி.கிருஸ்ணகுமார், வீரகேசரி பத்திரிகையின் முகாமையாளர் கே.கந்தசாமி, தேசிய எழுச்சிப் பேரவை வடமராட்சி செயலாளர் சத்தியசீலன், யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கத் தலைவர் தவச்செல்வம், நெல்லியடி சனசமூகத்தைச் சேர்ந்த கிருஸ்ணராஜா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் எஸ்.கஜேந்திரன், சிவாஜிலிங்கம், சுரேஸ் பிரேமச்சந்திரன், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர், நெல்லியடி மத்திய மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தைச் சேர்ந்த பாலசிங்கம் ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

இதனையடுத்து பிற்பகல் 2 மணியளவில் மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய இசையுடன் வதிரி ஆலங்கட்டை மயானத்திற்கு புகழுடல் எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்பட்டது. இந்த நிகழ்வில் - ஆயிரக்கணககான பொதுமக்களும், மாணவர்களும் கலந்துகொண்டனர்.

## ஓமந்தை முகாமில் திருடப்பட்ட துப்பாக்கிகள் பொலிஸாரால் மீட்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள ஓமந்தை இராணுவ முகாமில் இருந்து திருடப்பட்டதாகக் கூறப்படும் தன்னியக்கத் துப்பாக்கிகளை பொலிஸார் நேற்றுக் கைப்பற்றினர்.

வவுனியாவில் இருந்து கொழும்பு நோக்கிப் புறப்படவிருந்த தனியார் பஸ் ஒன்றிலிருந்தே நேற்று மாலை இந்த ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த ஆயுதங்களைத் திருடியதாகக் கூறப்படும் இரண்டு சிங்களவர்களையும் பொலிஸார் கைது செய்தனர். இது தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (01)

## பாரிய நிதி நெருக்கடிக்குள்...

1 பில்லியன் ரூபா தேவைப்படும்.

பசளைகளின் விலையை 200 ரூபாவினால் குறைத்தமை காரணமாக, அதற்கான மானியமாக அரசாங்கம் 1.2 பில்லியன் ரூபாவை செலுத்தவேண்டியுள்ளது.

சமுர்த்தி இலாபம் பெறுவோரின் அதிகரிப்புக்காக 4 பில்லியன் ரூபா செலவாகும். ஊழியர்களின் வேதனத்துக்காக 25 பில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

அத்துடன், எரிபொருளின் விலையை கட்டுக்குள் வைத்துக் கொள்வதற்காக அரசாங்கத்திற்கு 5 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது.

பிறிமாவுக்கு மானியமாக 1.2 பில்லியன் ரூபாவை அரசாங்கம் செலுத்தவேண்டியுள்ளது. இவ்வாறான நிலைமையின் கீழேயே இன்று அரசாங்கம் நிர்வாகத்தை நடத்திச் செல்ல முடியாத நிதி நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது.

இதனையடுத்தே அது மக்களிடம் இருந்து பண முறியைப் பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார்.(01)

## அரசியல்...

தைப் போன்றே இந்தியாவும் அதனை அனுமதிக்க மாட்டாது.

விடுதலைப் புலிகளை இந்தியா தடை செய்திருந்தாலும், இலங்கைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அது தடையாக இருக்காது.

புலிகளுடன் இலங்கை அரசு பேச்சுக்களை நடத்துவதற்கு முன்னர் அரசியல் ரீதியாகப் பலமாக இருக்க வேண்டும் அதற்கு இந்தியா உதவ வேண்டுமென்றும் அவர் தனது பேட்டியில் தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

குறித்து இந்தச் சந்திப்புக்களில் விரிவாக ஆராயப்பட்டிருந்தது.

இது தொடர்பாக இந்தியத் தலைவர்களின் நிலைப்பாடுகள், அவர்கள் கொண்டிருக்கும் கருத்துக்கள் குறித்து லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு நேற்றைய சந்திப்பின்போது விளக்கிக் கூறினார்.

மேலும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை இலங்கைக்கு வருமாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஊடாக ஜனாதிபதி சந்திரிகா அழைப்பு விடுத்திருந்தார்.

இந்த அழைப்பை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் ஏற்றுக் கொண்ட தகவலையும் ஜனாதிபதி சந்திரிகாவிடம் கதிர்காமர் நேற்றைய சந்திப்பின் போது தெரிவித்தார். (01)

வாணி விலாஸ்
வேலையாட்கள் தேவை
★ வெளிநாட்டு, உள்நாட்டு சமையலாளர்
★ சமையல் உதவியாளர்
★ பில் கிளார்க்
★ ஐஸ்கிறீம், சர்பத் மற்றும் குளிர்பான வகைகள் தயாரிப்பாளர்
★ தங்கி நின்று வேலை செய்வோருக்கு முன்னுரிமை
★ உணவு, தங்குமிட வசதி
★ தகுந்த வேதனம் வழங்கப்படும்
தகுதியுடையவர்கள் 8 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவும்.
உடன் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
வாணி விலாஸ்
76, K.K.S றோட்,
சுன்னாகம்.
(சி/2633)



நாளை பரீட்சை
இன்று அனுமதிகளுக்கான இறுதி நாள்
விரையுங்கள் !
Mega
கொம்ப்யூட்டர் உயர் கல்விக்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சை
5-6-2004
ASIAN COMPUTERS
• 2 G, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
• Prasanna Computers - K.K.S.வீதி,சுண்ணாகம்.
• கொடிகாமம் ரோட், நெல்லியடி.

விற்பனை மேம்பாட்டாளர்கள் தேவை
நமது ஈழநாடு பத்திரிகையின், விற்பனை மேம்பாட்டு பகுதிக்கு ஆர்வமும், சுறுசுறுப்பும் உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
நீங்கள் ஆர்வமுடையவராயின் தங்களை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களுடன் எதிர்வரும் 2004.06.10 ஆம் திகதிக்கு முன்னர் காரியாலயத்திற்கு வருகைதரவும்.
நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு,
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.